Registered as a news paper.

பக்கங்கள் : பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆடி – 18 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ–ஆகிர் 26 (03.08.2005) புதன்கிழமை இதழ்:307

நவீன நாகரிக - நங்கையினரின் மனம் நறைந்த



சிறி கருமாரி நகையகம்

நயம் - நாணயம் - உத்தரவாதம்


தற்போது புதுப்பொலிவுடன்

இல.205/6, கஸ்தூரியார் வீதி,

(ராஜா தியேட்டர் கட்டடத்தில்)

யாழ்ப்பாணம். T.P: 222 5385





# தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடனத்துக்கு மட்டக்களப்பு மாநாட்டில் அங்கீகாரம்!

## ஆயிரக்கணக்கானோர் உணர்வுபூர்வமாக பங்கேற்பு

மட்டக்களப்பு —

வவுனியா மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தமிழ்த்தேசிய எழுச்சிப் பிரகடனத்துக்கு சர்வ தேசத்தின் அங்கீகாரத்தை வழங்கக்கோரும் பிரகடனம் மட்டக்களப்பு நகரில் நேற்று நடைபெற்ற பிரமாண்டமான தேசிய எழுச்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்த நேற்றைய தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டைக் குழப்புவதற்கு பல்வேறு சக்திகளும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தன.

கொலை மிரட்டல்களுக்கு மத்தியிலும் மாநாட்டுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்த நிலையில், நேற்றுமாலை 3.30 மணிக்கு மாநாடு ஆரம்பிக்கவிருந்த நிலையில் பிற்பகல் 2.30 மணியளவில் படையினரால் குண்டு ஒன்று வெடிக்கவைக்கப்பட்டது.

மாநாட்டை அச்சுறுத்தும் வகையில் இந்தக் குண்டுவெடிப்பு நடத்தப்பட்டபோதும், பிற்பகல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இரத்தத்தையும், உயிரையும் கொடுத்தே சமாதானத்தைக் காப்பாற்றி வருகிறோம்!



## எழுச்சி மாநாட்டில் இளந்திரையன்

மட்டக்களப்பு —

"சமாதான முயற்சிகள் தொடங்கப்பட்ட நாளில் இருந்து இந்த நிமிடம் வரை – சமாதானத்தைக் காபாற்றுவதற்காக இரத்தத்தையும், உயிரையும் விலையாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்" என்று விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் (மார்ஷல்) தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டில் சிறப்புரைநிகழ்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் -

கௌசல்யன், சேனாதி என்று இரத்தம் – இரத்தமாகச் சிந்திக் கொண்டும் சமாதானத்தை பாதுகாத்துக் கொண்டிருப்பவர்கள் நாம். எதற்கும் ஒரு எல்லையுண்டு.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் சூட்டில் ஊர்காவலர் காயம்!

வவுனியா —


வவுனியாவில் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஊர்காவலர் ஒருவர் காயமடைந்தார்.

தந்திரிமலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் அனுர பஸ்நாயக்க என்ற ஊர்காவற்படை சிப்பாய் துப்பாக்கிப்பிரயோகத்தில் காயமடைந்து சிகிச்சைக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக, வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.எம்.சி. அபயசிங்க பண்டா தெரிவித்தார்.

நேற்று அதிகாலை வவுனியா - தந்திரிமலை இராணுவ முகாமுக்கு சமீபமாகவுள்ள காட்டுப்பிரதேசத்தில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்களிலிருந்து சொல்ஹெய்ம் ஆறு வாரங்களுக்கு ஒதுங்குகிறார்!



ஒஸ்லோ —

இலங்கைக்கான நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் – அடுத்த 6 வாரங்களுக்கு சமாதான முயற்சிகளிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளார்.

நோர்வே நாடாளுமன்றத் தேர்தல் அடுத்த மாதம் 12 ஆம் திகதி நடைபெறவிருப்பதால் – தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவதற்காகவே சமாதான முயற்சிகளிலிருந்து தற்காலிகமாக ஒதுங்கிக்கொள்வதாக (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஹெல்கிசன் வெள்ளியன்று வன்னி வருகிறார்

கிளிநொச்சி —

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் நாளை மறுதினம் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஊர்காவற்படையைச் சேர்ந்தவர் வெலிக்கந்தவில் சுட்டுக்கொலை!

கொழும்பு —

பொலனறுவ மாவட்டத்திலுள்ள வெலிக்கந்த நகரின் மத்தியில் நேற்றுப் பிற்பகல் ஊர்காவற் படையைச் சேர்ந்த ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வெலிக்கந்த - அசேலபுரவைச் சேர்ந்த நாலக்க சம்பத்குமார என்பவரே கொல்லப்பட்டவராவார்.

தனது மனைவியுடன் வெலிக்கந்த பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்த போது - பொலிஸ் நிலையத்திற்கு சற்றுத் தொலைவில் வைத்தே இவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு நபர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை செய்து விட்டு தப்பியோடியதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

காயங்களுக்குள்ளான இவர் வெலிக்கந்த வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது அங்கு உயிரிழந்தார்.

இவரது உடலில் 6 துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.



EXPOAIR

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்.

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com. Your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...



# எழுச்சி நிகழ்வு ஏற்பாடுகள் குறித்த கலந்துரையாடல்!

கிளிநொச்சி—

கிளிநொச்சியில் நடைபெற வுள்ள தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வு தொடர்பான முன்னேற் பாடுகள் குறித்து அரச திணைக் கள் அதிகாரிகள், தனியார் நிறு வனத்தினர், கூட்டுறவு சங்கங் கள், வர்த்தகர்கள் ஆகியோரு டனான கலந்துரையாடல் இன்று ஆரம்பமாகவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து அரச சார்பற்ற நிறு வனங்களின் தலைவர், செயலா ளர், இணைப்பாளர், பணியாளர் கள் ஆகியோருடனான கலந் துரையாடல் இன்று காலை 10 மணிக்கு இணைய மாநாட்டு மண்டபத்திலும்,

அரச திணைக்களங்கள், கூட் டுத்தாபனங்கள் ஆகியவற்றின் தலைவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் நாளை காலை 10 மணிக்கு இணைய மாநாட்டு மண்டபத்திலும்,

கூட்டுறவு சங்கங்களின் தலை வர்கள், பொதுமுகாமையாளர் கள், நெறியாளர் குழு ஆகியோருக் கான கலந்துரையாடல் நாளை மறுதினம் காலை 10 மணிக்கு இணைய மாநாட்டு மண்டபத் திலும்,

வர்த்தக நிலையங்களின் உரி மையாளர்களுக்கான கலந்துரை யாடல் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பண்பாட்டு மண்டபத் திலும்,

மாவட்டத்தின் அனைத்து பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு பண்பாட்டு மண்டபத் திலும் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் களில் சம்பந்தப்பட்ட அனை வரையும் இதன் தேசிய முக்கி யத்துவம் கருதி கலந்து கொள்ளு மாறு கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசிய எழுச்சிக்கான நடவடிக்கை செயலணிச் செய லகம் அறிவித்துள்ளது.

# வீடமைப்புத் திட்டம் குறித்து அதிகாரிகளுக்கு பயிற்சி!

யாழ்ப்பாணம்—

உலக வங்கியின் அனுசர ணையுடன் வடக்கு - கிழக்கு மாகாண வீடமைப்பு புனர்நிர் மாண திட்டத்தின் கீழ், 2006 ஆம் ஆண்டில் யாழ். மாவட்டத் தில் இரண்டாவது கட்ட வீட மைப்புத் திட்டங்களை நடை முறைப்படுத்துவது தொடர் பான பயிற்சி எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். செயலகத் தில் அரச அதிபர் கே. கணேஸ் தலைமையில் நடைபெறவுள் ளது.

இதில் அனைத்து பிரதேச செயலாளர்கள், உதவித்திட்ட மிடல் பணிப்பாளர்கள், அபி விருத்தி இணைப்பாளர்கள் ஆகி யோரைக் கலந்து கொள்ளுமாறு யாழ். செயலகம் அறிவித்துள் ளது.

இந்தக் கருத்தூட்டல் பயிற் சியை வடக்கு - கிழக்கு மாகாண வீடமைப்பு தலைமையகத்தின் அதிகாரிகள் நடத்தவுள்ளனர்.

## புனித சவேரியார் ஆலய கட்டட நிதிக்காக சென்.சேவியர் விளையாட்டுக்கழகம் நடத்திய அதிஸ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு இல - 1981
இரண்டாம் பரிசு இல - 4060
மூன்றாம் பரிசு இல - 3435
மேலும் ஆறுதல் பரிசு இலக்கங்கள்

| | | |
|---|---|---|
| 1) 2336 | 5) 4115 | 9) 2423 |
| 2) 3719 | 6) 3274 | 10) 765 |
| 3) 799 | 7) 521 | |
| 4) 2639 | 8) 846 | |

இச்சீட்டிழுப்பினை நடத்துவதற்கு அன்பளிப்பு செய்த :-
**லக்ஷ்மி எலக்ரிக்கல்ஸ்**
*1ம் கட்டை, தம்பசிட்டி*
**பங்குத்தந்தை** - *சற்கோட்டை*
**றீம்ஸ் சீடி பிளாஸா**
*1ம் கட்டை, தம்பசிட்டி*

இவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்தோடு இச்சீட்டிழுப்பிற்கு பல வழிகளிலும் உதவி புரிந்த எமது பங்குத் தந்தை ம.பத்திநாதர் அவர்கட்கும், விளையாட்டுக்கழக அங்கத்தவர் களுக்கும் எமது நன்றிகள்.

சற்கோட்டை, அல்வாய் வடக்கு
அல்வாய். (C/4331) சென்.சேவியர் வி.க

# விஞ்ஞான அடைவினை மேம்படுத்த மாணவர்களுக்கு ஆய்வுகூட செய்முறை

சாவகச்சேரி—

தென்மராட்சி வலயப்பாட சாலைகளில் இந்த வருடம் க.பொ.த.சாதாரண தரப்பரீட் சைக்கு தோற்றும் மாணவர்களின் விஞ்ஞான பாட அடைவினை உயர்த்தும் பொருட்டு, இரண்டாம் தவணை விடுமுறை காலத்தில் நடமாடும் ஆய்வுகூட சேவையின் மூலம் அவசியமான செய்முறைப் பரிசோதனைகளை மாணவர் களுக்கு செய்து காட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தரம் 11இல் கல்விகற்கும் அனைத்து மாணவர்களையும், கற்பிக்கும் விஞ்ஞான பாட ஆசி ரியர்களையும் செய்முறை வகுப் பில் தவறாது பங்குபற்றுமாறு வலயக்கல்விப்பணிப்பாளர் அனைத்து பாடசாலை அதிபர் களுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

இன்று வரணி மகாவித்தி யாலயத்தில் நடைபெறும் செய் முறை வகுப்பு வரணிஇடைக் குறிச்சி மகாவித்தியாலயம், வரணி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களையும்,

எதிர்வரும் 8ஆம் திகதி கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தி யாலயத்தில் நடைபெறும் செய் முறைப் பயிற்சியில் - கைதடி முத்துக்குமாரசாமி வித்தியால யம், கைதடி விக்னேஸ்வரா வித்தி யாலயம், கைதடி குருசாமி வித்தி யாலயம், கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலை, நாவற்குழி மகாவித்தியாலயம் ஆகிய பாட சாலை மாணவர்களையும்,

எதிர்வரும் 10ஆம் திகதி கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடை பெறும் செய்முறைப் பரீட்சையில் - கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், கொடிகாமம் அ.த.க பாடசாலை, விடத்தற் பளை கமலாசினி வித்தியாலயம், உசன் இராமநாதன் மகா வித்தி யாலயம், எழுதுமட்டுவாழ் அ.த.க பாடசாலை, மிருசுவில் வடக்கு அ.த.க பாடசாலை, கச்சாய் அ.த.க பாடசாலை ஆகிய பாட சாலை மாணவர்களையும்,

எதிர்வரும் 15ஆம் திகதி சாவ கச்சேரி மகளிர் கல்லூரியில் நடை பெறும் செய்முறைப் பயிற்சி வகுப்பில் - டிறிபேக் கல்லூரி, மகளிர் கல்லூரி, ஆகியவற்றின் மாணவர்களையும்,

18ஆம் திகதி சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறும் செய்முறைப் பயிற்சி வகுப்பில் - அந்தப்பாடசாலை மாணவர் களையும்,

27ஆம் திகதி வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் செய்முறைப் பயிற்சி வகுப்பில் - வீரசிங்கம் மகாவித்தியாலய மாணவர்களையும், அல்லாரை அ.த.க பாடசாலை, மந்துவில் றோ.க.த.க பாடசாலை, மந்து வில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வரா வித்தி யாலயம் ஆகிய பாடசாலை மாண வர்களையும் பங்குபற்றுமாறு வலயக்கல்வி அலுவலகம் அறி வித்துள்ளது. (29)

# தீவக வலய ஆசிரியர்களுக்கு

தீவகம்—

தீவக கல்வி வலய ஆசிரியர் கள் பதவியை உறுதிப்படுத்து வதற்காக, மூன்று வருட சேவை யைப் பூர்த்தி செய்தவர்கள் படிவங்களை விரைவாக பூர்த்தி செய்து வலயத்தில் கையளிக்கு மாறு பிரதிக் கல்விப் பணிப்பா ளர் வ.இராதாகிருஸ்ணன் கேட் டுள்ளார்.

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இன்னும் சில நாட்கள்
அக்சன் கிங் அர்ஜூன், சிநேகா நடித்த

சின்னா
காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
மாதவன், சதா மற்றும் பலர் நடித்த

பிரியசகி
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு! காதல் புகழ் பரத், ரேணுகா மேனன்
பெப்ரவரி 14

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்று மட்டும்
ரஜினி, பிரபு, ஜோதிகா, நயந்தாரா மற்றும் பலர் நடித்த
சந்திரமுகி
நாளை முதல்
மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் மற்றும் லதா, நாகேஸ் நடித்த
உரிமைக் குரல்
பஸ் போக்குவரத்துபாதை
இல 782 – காரைநகர் / 787 மாதகல்
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு!
ஜெயம்ரவி, ரேணுகாமேனன், வடிவேலு மற்றும் பலர் நடித்த

தாஸ்
காட்சிகள்:- 11.00, 3.00, 7.00, 10.00 (பழைய நேரம்)

வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்

## மணல் விநியோக அறிவித்தல்

ஆடி அமாவாசையினையொட்டி 4.8.2005 வியாழக்கிழமை மணல் விநியோகம் நடை பெறமாட்டாது. அன்றைய திகதி குறிப்பிடப் பட்டவர்களுக்குரிய மணல் 6.8.2005 சனிக் கிழமை வழங்கப்படும். அன்றையதினத்தில் வேறு அனுமதிப்பத்திரங்களுக்கு மணல் விநி யோகம் நடைபெறமாட்டாது.

நிர்வாகி

(2006)

சுதா ரேடர்ஸ்

தச்சுவேலை செய்யும் மிசின்கள் 10", 12", 14", 16" ஆகியனவும் எலக்றிக் றில்லர்கள், றவுட்டர்கள், மாபிள் கட்டிங் மெசின்கள், கிறைண்டர்கள், அலுமினியக் கட்டிஸ் மெசின், வளைவு வெட்டும் மெசின்கள், மரம் துண்டு போடும் வாள், பிளாஸ்ரிக் எழுத்து வெட்டும் மெசின்கள், ஸ்ராண்ட் றில்லர்கள், வெல்டிங் பிளான்ட் வகைகள், கடைச்சல் மெசின் மற்றும் சகலவிதமான எலக்றிக் உபகரணங்கள் யாவையும் பெற்றுக்கொள்ளலாம். இவற்றுடன் கொம்பிறேசர், வாகனம் கழுவும் சேவிஸ் பம், சகல விதமான பிறஸ் வகைகளையும், வீட்டு உபகரணங்களான றைஸ்குக்கர், மிக்ஸி, சான்விச் மேக்கர், கான்ட் மிக்ஸர், வக்கியூம் கிளினர், அயன் பொக்ஸ் வகைகள், மின்விசிறி வகைகள் யாவற்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

01.08.2005 தொடக்கம் 31.08.2005 வரை அனைத்துப் பொருட்களுக்கும் 5 % விசேட கழிவாக வழங்கப்படும்.

சுதா ரேடர்ஸ்
339, அரசடி வீதி. நல்லூர் யாழ்ப்பாணம்.
(சி/4324)

## யாழ்ப்பாணம் மாநகர சபை பொதுசன நூலகம்

### தனியார் பாதுகாப்புச் சேவைக்கான விண்ணப்பம்

யாழ்.பொதுசன நூலகத்திற்கு 01.09.2005 தொடக்கம் ஒரு வருட காலத்திற்கு தினமும் 24 மணி நேரம் பாதுகாப்புச் சேவை வழங்கக் கூடிய இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனங்களிடமிரு ந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பகல் 03 பேரும், இரவு 03 பேரும் பாதுகாப்புப் பணி யில் ஈடுபட வேண்டும். தெரிவு செய்யப்படும் நிறு வனம் மாநகர சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள் வதுடன், சித்தி பெறும் கேள்விகாரர் ஒப்பந்தம் செய்யும் போது ரூபா 100,000 பெறுமதியான பிணைமுறி ஒன்று வழங்கல் வேண்டும்.

மாநகர சபையில் பெறக்கூடிய விண்ணப்பப் படி வத்தில் மட்டுமே விண்ணப்பிக்கலாம். விண்ணப் பப் படிவம் ரூபா 100 (வற்வரி நீங்கலாக) ம் மீள ளிக்கக் கூடிய வைப்புப் பணம் ரூபா 500 ம் செலுத்தி மாநகர சபை அலுவலகத்தில் 15.08.2005 ஆம் திகதி 2.00 மணிக்கு முன் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் படிவம் பெறப்பட்ட பின்னர் விண்ணப் பிக்காவிடின் வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட் டாது.

விண்ணப்பங்கள் யாவும் 25.08.2005 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் மாநகர ஆணை யாளர், மாநகர சபை யாழ்ப்பாணம். என்னும் முக வரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் அல்லது நேரடியாகக் கையளிக்கப்படல் வேண் டும். கேள்விகள் யாவும் 25.08.2005 ஆம் திகதி நண்பகல் 12.30 மணிக்கு திறக்கப்படும். அப் போது விரும்பிய விண்ணப்பகாரர் பார்வையிட லாம்.

கலாநிதி க.குணராசா,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்,
02.08.2005. (C/4330)

# சுனாமி முன்னறிவிப்பு கருவிகள் பொருத்துவது தொடர்பாக அவுஸ்ரேலியாவில் இன்று மாநாடு!

கொழும்பு—

இந்து சமுத்திரத்தில் சுனாமி அபாய அறிவிப்பை வழங்கும் கருவிகளை நிறுவுவதற்கான முதற்கட்டப் பேச்சுவார்த்தைகள் அவுஸ்ரேலிய பேர்க் நகரில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

யுனெஸ்கோ சர்வதேச நாடுகளுக்கிடையிலான இணைப்புக்குழுக் கூட்டமாகவே இது இடம்பெறவுள்ளது. இந்து சமுத்திர சுனாமி அபாய அறிவிப்புக் கருவிகளுக்கு அவசியமான தொழில்நுட்ப வளங்கள் தொடர்பாகவும், இங்கு ஆராயப்படவுள்ளது.

புவி மேற்பரப்பின் மாற்றங்கள் மற்றும் கடல் மட்டத்தின் மாற்றங்கள் தொடர்பாக தகவல்களைச் சேகரித்தல், ஆழ்கடலின் அழுத்தங்களை அவதானித்தல் அதன் மூலம் எதிர்வுகூறல்களை வெளியிடல் என்பன இதில் உள்ளடங்கும்.

இதற்கும் மேலதிகமாக சுனாமி தொடர்பாக மக்களுக்கு முன்கூட்டியே தகவல்களை வழங்குவதற்கான இயந்திர சாதனங்களை தொழில்நுட்ப உதவியுடன் நிறுவுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான முதற்கட்ட கலந்துரையாடலுக்கு அவுஸ்ரேலிய அரசாங்கமே முழு அனுசரணை வழங்குகிறது.

இந்து சமுத்திரத்தில் சுனாமி அனர்த்தம் தொடர்பாக அபாய அறிவிப்பை வெளியிட 24 மணித்தியாலமும் செயற்படச் செய்வது இந்தச் செயற்திட்டத்தின் நோக்கமாகும். இந்த இணைப்புக் குழுக் கூட்டத்தில் சுற்றாடல் மற்றும் இயற்கை வளத்துறை அமைச்சர் ஏ.எச். எம்.பௌசி கலந்துகொள்ளவுள்ளார். (01)

# பெற்றோலுக்கு தட்டுப்பாடு ஏற்படும் வாய்ப்பு இல்லை!

கொழும்பு—

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வசம் போதியளவு பெற்றோல் இருப்பதால், பெற்றோலுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லையென - மின்சக்தி எரிபொருள் அமைச்சர் சுசில் பிறேம ஜெயந்த தெரிவித்தார்.

சில விஷமிகள் இரண்டு நாட்களுக்குத் தேவையான பெற்றோலே கையிருப்பில் இருப்பதாக வதந்தி பரப்பியதால், குழப்பமடைந்த மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முண்டியடித்துப் பெற்றோலைக் கொள்வனவு செய்துவருகின்றனர் .

கடந்த ஞாயிற்றுக்கிழமை பெற்றோல் அடங்கிய கப்பல் ஒன்று வரவிருந்தபோதிலும், பயணத்தில் ஏற்பட்ட நெருக்கடியையடுத்து பெற்றேலியக் கூட்டுத்தாபனம் மட்டுப்படுத்திய அளவிலே பெற்றோலை வழங்கிவருவதாகவும் - கப்பலில் இருந்து எரிபொருட்கள் இறக்கப்பட்டதும் தூர இடங்களுக்குத் தட்டுப்பாடின்றிப் பெற்றோல் விநியோகம் செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# மஹிந்தவுக்கு ஆதரவு திரட்ட ஜே.வி.பியுடன் இரகசியப் பேச்சு



கொழும்பு—

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிப்தி வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை வெற்றிபெறச்செய்யும் வகையில், ஜே.வி.பியின் ஆதரவைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக - சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட குழுவொன்று ஜே.வி.பியுடன் உத்தியோகப்பற்றற்ற முறையில் பேச்சுக்களை நடத்திவருவதாக சுதந்திரக் கட்சித் தகவல்கள் தெரிவித்தன.

இந்தக் குழுவுக்கு - துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் மங்கள சமரவீர தலைமை தாங்கியுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை வெற்றியடையச் செய்யும் வகையில், ஐ.தே.கட்சிக்கெதிரான அனைத்துச் சக்திகளினதும் ஆதரவைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பது, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நிலைப்பாடாகும்.

இதனால் அரசாங்கத்திலிருந்து விலகிய ஜே.வி.பியுடனும், அரசிற்கு வெளியே உள்ள மற்றைய கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தி உடன்பாடொன்றை ஏற்படுத்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. (தே)

# காசோலை மோசடி செய்த நபர் வத்தளையில் கைது!

கொழும்பு—

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சுக்குச் சொந்தமான 2ஆயிரத்து 650 ரூபா பெறுமதியான காசோலையை 9,85,000 ரூபாவாக மாற்ற முற்பட்டமை மற்றும் களவாடப்பட்ட 9,72,000 காசோலை ஒன்றை மாற்றமுற்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு - கோட்டை நீதிவான் உத்தரவிட்டார்.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் கணக்காளர் செய்த முறைப்பாட்டுக்கமைய வத்தளையைச் சேர்ந்த சந்தேகநபரான ஆர்.சிறிமணியை கொழும்பு மோசடி தடுப்புப் பிரிவினர் கைதுசெய்து, கோட்டை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். சந்தேகநபர் வெவ்வேறு பெயர்களைப் பயன்படுத்தியுள்ளார். புனர்வாழ்வு அமைச்சு - உலக உணவுத் திட்டத்துடன் இணைந்து வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவுகளை விநியோகிக்கும் திட்டத்தில் ஈடுபட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட 2ஆயிரத்து 650 ரூபா பெறுமதியான காசோலையில் 9,85,000 ரூபா என மாற்றம்செய்து அதனை மாற்றியிருப்பதாகவும், 9,72,000 ரூபா பெறுமதியான மற்றொரு காசோலையை மாற்ற முற்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# இரவு பத்து மணிக்கு மேல் மதுபானம் விற்கத் தடை!

கொழும்பு—

நாடெங்கும் உள்ள விடுதிகள், விளையாட்டுக்கழகங்கள், வாடிவீடுகள் ஆகியவற்றில் இரவு 10 மணிக்கு மேல் மதுபான விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளதாக- பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்குத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி - இரவு 10 மணிக்கு மேல் அந்த இடங்களில் மது அருந்துவதும் தடை செய்யப்பட்டுள்ளது. இரவுக் களியாட்ட விடுதிகளில் இடம்பெறும் முறையற்ற நடவடிக்கைகளைக் குறைக்க சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு பொலிஸாரை - அமைச்சின் செயலாளர் பணித்துள்ளார்.

எந்தவித காரணங்களுக்காகவும் இந்தக் கட்டளைகளை மீறவேண்டாம் என அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்தார். (01)

# சொகுசு கார் கொள்வனவுக்கு மேர்வின் சில்வா பணிப்புரை!

கொழும்பு—

ஊடகங்களுடன் சர்ச்சையில் ஈடுபட்டிருக்கும் பிரதியமைச்சர் மேர்வின் சில்வா - கடந்த வாரம் பிரதியமைச்சராகப் பதவியேற்றவுடனேயே தனது உத்தியோகபூர்வ பாவனைக்கென 9.5 மில்லியன் ரூபா பெறுமதியான சொகுசுக் காரோன்றைக் கொள்வனவு செய்வதற்குப் பணிப்புரை விடுத்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் பிரதியமைச்சராகப் பதவியேற்றவுடனேயே - பிரதியமைச்சர் தனது பாவனைக்காக இந்தச் சொகுசுக் காரை வாங்கப் பணித்துள்ளதாகவும், இதற்கென அவர் திறைசேரியின் அனுமதியைப் பெற்று இதற்கான பண ஒதுக்கீட்டைப் பெற்றிருப்பதாகவும் தெரியவருகிறது.

புதிய பிரதியமைச்சருக்கு சொகுசுக் காரொன்றை வாங்க திறைசேரி 9.5 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளமையை - வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தினார்.

கடந்த வாரம் பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளுடன் கைகலப்பில் ஈடுபட்டமை மற்றும் பிரதியமைச்சர் மேர்வின் சில்வா தனியார் ஊடகங்களை சாடியமை ஆகிய விடயங்களைத் தொடர்ந்து - ஊடகங்களின் கவனம் பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவின் பக்கம் திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)



கடந்த சனிக்கிழமையன்று அம்பாறை - திருக்கோயில் மீன்பிடி கூட்டுறவு சமாசத்தில் வைத்து சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்களுக்கு ஒரு தொகுதி மீன்படி உபகரணங்களை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் உதவியுடன் - கழக மீன்படி அபிவிருத்தி உத்தியோகத்தர் தினேஷ் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# மேர்வின் சில்வாவுக்கு எதிராக மலையக மக்கள் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு—

பிரதியமைச்சர் மேர்வின் சில்வா அண்மையில் இந்திய வம்சாவழி மக்கள் தொடர்பாக வெளியிட்டிருந்த கருத்துக்களைக் கண்டிக்கும்வகையில், மலைய மக்கள் முன்னணி எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை எதிர்வரும் 8 ஆம் திகதி கொழும்பு கோட்டே ரயில் நிலையத்துக்கு முன்பாக நடத்தவுள்ளது.

இந்திய வம்சாவழி மக்கள் தொடர்பாக பிரதியமைச்சர் மேர்வின் சில்வா அண்மையில் வெளியிட்ட கருத்துகளைக் கண்டிக்கும் வகையிலேயே இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தப்போவதாகத் தெரிவித்த மலையக மக்கள் முன்னணி -

ஜனாதிபதி சந்திரிகா - பிரதியமைச்சர் மேர்வின் சில்வா மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டுமென இந்த ஆர்ப்பாட்டத்தின்மூலம் வலியுறுத்தவுள்ளதாகவும் கூறியுள்ளது.

இந்தப் போராட்டத்தில் அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், வர்த்தக சங்கங்கள், தொழிற் சங்கங்கள் மற்றும் ஊடக அமைப்புகள்ஆகியன கலந்து கொள்ளவுள்ளதாகவும் மலையக மக்கள் முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

# பஞ்ச தர்மக் கொள்கையை ஏற்றுக்கொண்டால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கே ஆதரவு!

## ஹெல உறுமய கூறுகிறது

கொழும்பு—

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ - ஜாதிக ஹெல உறுமயவின் பஞ்ச தர்மக் கொள்கைகளை ஏற்றுக்கொள்வதாகப் பகிரங்கமாக அறிவிப்பாராயின், அவரைப் பொது வேட்பாளராகக்கருதி ஜாதிக ஹெல உறுமய பிறிதொரு வேட்பாளரை நிறுத்தாது என்று அதன் கொள்கை திட்டமிடல் உறுப்பினரான பாடலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் -

ஜாதிகஹெல உறுமயவின் ஜனாதிபதி வேட்பாளராகத் தற்போது மூவரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பஞ்சதர்ம கொள்கையை ஏற்றுக்கொள்வாராயின் -எமது கட்சியிலிருந்து பிறிதொரு வேட்பாளரை நிறுத்தாமல் விடுவோம்.

அதுமட்டுமன்றி மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறச் செய்வதற்கு ஜாதிக ஹெல உறுமய முழு அர்ப்பணிப்புடன் செயற்படும்.

நாட்டின் இறைமையைத்தொடர்ந்து பாதுகாக்க வேண்டும். இலங்கையில் தேசிய உரிமை இருப்பது, இந்த நாட்டின் நாகரிகத்தைக் கட்டியெழுப்பிய சிங்களவர்களுக்கே என்பதை ஏற்றுக் கொள்வதுடன், ஐக்கிய நாடுகள் ஏற்றுக்கொண்ட ஏனைய சிறுபான்மையினரினது உரிமைகளும் பாதுகாக்கப்படவேண்டும்.

விடுதலைப்புலிகளுடனோ, ஏனைய பயங்கரவாத அமைப்புகளுடனோ எந்தவித உடன்படிக்கைகளையும் ஏற்படுத்திக்கொள்ளக்கூடாது.

நிறைவேற்றுஅதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை மற்றும் விகிதாசார தேர்தல் முறையில் தேவையான திருத்தங்களைச்செய்து, நீதித்துறையின் சுயாதீனத் தன்மையைப் பாதுகாக்கக்கூடிய அரசியலமைப்புத் திருத்தமொன்று செய்யப்படவேண்டும்.

பௌத்த தர்மத்துக்கு அமைய கட்டியெழுப்பப்பட்ட தேசிய கலாசாரம் மற்றும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பச் செயற்படவேண்டும்.


இந்தப் பஞ்சதர்மக் கொள்கைகளை ஏற்றுக்கொள்வாராயின், கடந்த பொதுத் தேர்தலின்போது ஜாதிக ஹெல உறுமய பெற்றுக்கொண்ட ஆறுலட்சம் வாக்குகளையும், ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பாடலிய சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு தமிழ்த்தேசிய எழுச்சி மாநாட்டிலிருந்து...














# சூடான் நிலைமைகள் பற்றி ஆராய 2அதிகாரிகளை அனுப்பினார் புஷ்!



கார்ட்டூம்—

சூடானின் உபஜனாதிபதியும் முன்னாள் கிளர்ச்சிவாத தலைவருமான ஜோன் கராங் ஹெலி விபத்தில் உயிரிழந்ததையடுத்து ஏற்பட்டுள்ள நிலைமையை ஆராய்வதற்காக இரண்டு உயர் அதிகாரிகளை அமெரிக்க ஜனாதிபதி புஷ் சூடானுக்கு அனுப்பியுள்ளார்.

இவ்வாறு அனுப்பப்பட்டவர்கள் அமெரிக்காவின் இராஜாங்கதிணைக்களத்தின் ஆபிரிக்க நாடுகளுக்கான உதவிச் செயலாளர் கூனி நியூமான் மற்றும் சூடானுக்கான அமெரிக்காவின் விசேட பிரதிநிதி றோஜர் வின்ரர் ஆகியோராவர்.

இவர்கள் இருவரும் தலைநகர்கார்ட்டூம் மற்றும் சூடானின் தென்பகுதிக்கும் சென்று சூடான் மக்கள் விடுதலைமுன்னணியின் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்துவார்களென அமெரிக்க இராஜாங்க செயலகத்தின் பேச்சாளர் கேசே தெரிவித்தார். எனினும், அவர்கள் இருவரும் சூடான் ஜனாதிபதி ஓமர் அல் பசீரைச் சந்திப்பார்களா என்பதனை அவர் கூற மறுத்துவிட்டார். அத்துடன், டர்பூர் நிலமைகள் தொடர்பாகவும் இவர்கள் கலந்துரையாடல்களை நடத்துவரெனவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே, கராங்கின் மரணத்தையடுத்து தலைநகர் கார்ட்டூமில் அரசுக்கெதிராக இடம்பெற்ற வன்செயல்களில் 20 பேர் உயிரிழந்ததாகவும், இவர்களில் பெருமளவானோர் பொலிஸாரெனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த வன்செயல்களை அடுத்து தலைநகர் கார்ட்டூம்



உட்பட சூழவுள்ள பகுதிகளில் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி புஷ், ஐ.நா.செயலர் கொபி அனான் மற்றும் சூடான் மக்கள் விடுதலை இராணுவத்தின் தற்போதைய தலைவர் கிர் ஆகியோர் மக்களை அமைதியாக இருக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, கராங் மரணமானதையடுத்து அவரது இடத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட கிர்றை உப ஜனாதிபதியாக நியமிக்குமாறு சூடான் மக்கள் விடுதலை இராணுவம் பரிந்துரை செய்துள்ளது.

## எகிப்து குண்டுவெடிப்பு சூத்திரதாரி பொலிஸாரின் தாக்குதலில் பலி!



கெய்ரோ—

எகிப்தின் செங்கடல் பகுதியில் உள்ள ஷாம் அல் ஷேக் நகரில் கடந்த மாதம் 23ஆம் திகதி தொடர் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. ஹோட்டல்கள், சந்தைப் பகுதி உட்பட 7இடங்களில் நடந்த வெடிகுண்டுத் தாக்குதலில் 64 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பலியாகினர். அல்கொய்டா இயக்கத்துடன் தொடர்புள்ள ஒரு இயக்கம் இந்தத் தாக்குதலை நடத்தியது.

இந்தத் தாக்குதலை நடத்திய தீவிரவாதிகள் கிபல்அடர்கா மலைப்பகுதியில் பதுங்கியிருப்பதாக எகிப்து பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதைத் தொடர்ந்து பொலிஸார் அந்த இடத்தைச் சுற்றிவளைத்தனர். அப்போது தீவிரவாதிகளுக்கும் பொலிஸாருக்குமிடையே பயங்கர துப்பாக்கிச் சண்டை நடந்தது.

இதில் முக்கிய தீவிரவாதி முகமது புலாய் பெல் உட்பட அவரது மனைவியும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட தீவிரவாதி முகமது கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதமும் இதேபோல் ஹோட்டல்களில் வெடிகுண்டு தாக்குதல் நடத்தி 34 சுற்றுலாப் பயணிகளை கொன்ற வழக்கில் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாக்தாத்தில் பாடசாலை அருகே 19 சடலங்கள் பொலிஸாரால் மீட்பு!



பாக்தாத்—

ஈராக் தலைநகர் பாக்தாத்தின் தென்மேற்குப் பகுதியில் பாடசாலை ஒன்றுக்கருகிலிருந்து 19 சடலங்கள் துப்பாக்கிச் சூடு மற்றும் சிரச்சேதம் செய்யப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டன.

இவ்வாறு கண்டெடுக்கப்பட்ட சடலங்களில் சில கண்கள் கட்டப்பட்ட நிலையில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடனும், ஏனையவை சிரச்சேதம் செய்யப்பட்டநிலையிலும் காணப்பட்டதாகவும், இவையனைத்தும் ஆண்களுடையவை எனவும் தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சடலங்கள் அனைத்தும் பிக்கப் வாகனமொன்றில் இனந்தெரியாதவர்கள் சிலரால் கொண்டுவந்து போடப்பட்டதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர். கண்டெடுக்கப்பட்ட சடலங்கள் அனைத்தும் 18 தொடக்கம் 45 வயதிற்கிடைப்பட்டவர்களது என பொலிஸ் அதிகாரி தகீர் மஃமூட் – ஏ.பி.செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார். இந்தச் சடலங்கள் எவையும் இதுவரை அடையாளம் காணப்படவில்லையென ஈராக்கிய உள்துறை அமைச்சுப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதனிடையே தலைநகர் பாக்தாத்தில் சிரேஷ்ட படை அதிகாரிஒருவர் கொல்லப்பட்டதுடன், அவரது இரண்டு மெய்ப்பாதுகாவலர்களும் படுகாயமடைந்தனர்.

# கொலம்பிய குண்டுவெடிப்பில் 14 பொலிஸார் பலி!

கொலம்பியா—

கொலம்பியாவில் வடக்குப் பகுதி நகரொன்றில் இடம்பெற்ற வீதியோரக் குண்டுவெடிப்பில் சிக்கி 14 பொலிஸார் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவித்தன.

இந்த தாக்குதல் நாட்டின் வட பகுதி நகரான சீரா நிவேதா பகுதியில் இடம்பெற்றது. இந்த வருடத்தில் இதுவரை படையினருக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட மிகமோசமான தாக்குதல் இதுவெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலை இடதுசாரி ஆயுதக்குழுவான புரட்சிகர இராணுவப் படைப்பிரிவே மேற்கொண்டிருக்க வேண்டுமென கொலம்பிய பொலிஸார் தெரிவித்தனர்.

கொலம்பிய அரச தொலைக்காட்சியில் தோன்றிய ஜனாதிபதி அல்வாரோ உரீபி – பொலிஸார் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் அதிர்ச்சியளிப்பதாகத் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலை யார் நடத்தியதென இதுவரை எவரும் உரிமைகோரவில்லை. எனினும், தாக்குதல் நடத்தப்பட்ட பிரதேசம் இடதுசாரி ஆயுதக்குழுவான புரட்சிகர இராணுவப் படைப் பிரிவின் செல்வாக்கு மிக்க பிரதேசமெனக் கூறப்படுகிறது.

உலக நோக்கு

# காலம் சென்ற மன்னரின் உடல்நேற்று நல்லடக்கம்!



றியாத்—

சவுதி அரேபிய மன்னர் பஹ்த்தின் இறுதிச் சடங்கு பல உலகத்தலைவர்கள் கலந்து கொள்ள தலைநகர் றியாத்தில் நேற்று இடம்பெற்றது.

பாரிசவாதத்தால் அவதிப்பட்டு வந்த மன்னர் பஹ்த் நேற்று முன்தினம் தனது 84 ஆவது வயதில் காலமானார். இதனையடுத்து இவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் வகையில் பல்வேறு உலகத்தலைவர்களும் சவுதிக்குச் சென்றுள்ளனர். இதில் பலஸ்தீன் ஜனாதிபதி அபாஸ் முதலில் சவுதிக்கு சென்றார்.

பிரான்ஸ் ஜனாதிபதி சிராக், பிரிட்டன் இளவரசர் சாள்ஸ், ஜோர்தான் மன்னர் மற்றும் ஜனாதிபதி, எகிப்து, லெபனான், ஜெமன், ஈராக் மற்றும் அல்ஜீரியா நாடுகளின் தலைவர்களும் இந்த இறுதி நிகழ்வில் பங்கேற்றனர்.

கடைகள், விடுதிகள் அனைத்தும் மூடப்பட்டுக் கிடந்தன. எனினும் சவுதியின் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டவில்லை. இதற்கு காரணம் சவுதியின் தேசியக்கொடியில் திருமறை வசனம் உள்ளதால் அதனை அரைக்கம்பத்தில் பறக்கவிடுவது தெய்வநிந்தனை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இன்று சவுதியின் மன்னராக தற்போதைய முடிக்குரிய இளவரசரான காலம் சென்ற பஹ்தின் சகோதரர் அப்துல்லா பதவியேற்கவுள்ளார். தற்போதைய பாதுகாப்பு அமைச்சரான சுல்தான் பி.அப்துல் அஸீஸ் முடிக்குரிய இளவரசராக நியமிக்கப்பட்டுள்ளார்.

4) திங்கட்கிழமை 18 பெண் பிள்ளைகள் சமுகமளித்தனர் எனின் அன்று சமுகமளித்த ஆண் பிள்ளைகள் எத்தனை பேர்?
.................................................

5) புதன்கிழமையை விட திங்கட்கிழமை எத்தனை மாணவர்கள் கூடுதலாக வகுப்புக்குச் சமுகமளித்தனர்?
.................................................

6) ஐந்து நாட்களிலும் சமுகமளித்த மாணவர்களின் மொத்தத் தொகை யாது?.................

▸ கீழே கேட்கப்படும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

(ஆனந்தக் கண்ணீர், வீதி விதிகள், தேசிய கல்வி நிறுவகம், ஆளி, காட்டுக் கோழிச்சேவல்)

1) இலங்கையின் தேசியப் பறவை எது?
.................................................

2) மகிழ்ச்சியின் மிதப்பாட்டால் தானாகவே கண்ணில் நின்று சிந்தும் நீர்த் திவலை?
.................................................

3) தே.க.நி. எனும் குறுகிய பதம் குறிக்கும் முழுப்பெயரை எழுதுக.
.................................................

4) மின்சுற்றைப் பூர்த்தியாக்கவும், நிறுத்தவும் பயன்படும் கருவி?
.................................................

5) வீதி விபத்துக்களைத் தடுக்க ................. பேணப்பட வேண்டும்.

▸ விழாவொன்றை ஏற்பாடு செய்வதற்கான திட்டம் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது. அப்படி முறையின் சரியான ஒழுங்கைக் கவனித்து அதற்கேற்ப ஒவ்வொரு கூற்றின் எதிரிலும் உள்ள கூட்டில் 1 இலிருந்து 8 வரை இலக்கங்களை எழுதுக.

1) அழைப்பு விடுதல் ☐
2) விருந்தினர் யாரெனத் தீர்மானித்தல் ☐
3) நாளைத் தீர்மானித்தல் ☐
4) விழா நாளன்றைய நிகழ்ச்சிகள் ☐
5) உபசரிப்புச் செய்தல் ☐
6) வரவேற்பு உரை ☐
7) நன்றியுரை ☐
8) முடிவு ☐

▸ இரத்மலானை இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் அண்மையில் கல்விச் சுற்றுலாவுக்குச் சென்றிருந்தனர். அப்போது அவர்கள் இரு சிறுவர் இல்லங்களுக்குச் சென்று அங்கிருந்த பிள்ளைகளுக்கு அன்பளிப்புக்களை வழங்கினர். இது தொடர்பாக கீழே தரப்பட்டுள்ள விபரங்களைப் படித்து அதன்கீழுள்ள வினாக்களுக்குரிய விடையைத் தருக.

| தரம் | பங்குபற்றியோர் பெண் பிள்ளைகள் | ஆண் பிள்ளைகள் |
|---|---|---|
| 3 | 20 | 26 |
| 4 | 18 | 34 |
| 5 | 10 | 40 |

1) சுற்றுலாவில் பங்குபற்றிய தரம் 3 பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?
.................................................


2) சுற்றுலாவில் பங்குபற்றிய பெண் பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?
.................................................

3) எந்த வகுப்பில் அதிகளவு மாணவர்கள் சுற்றுலாவில் பங்கு பற்றினர்?
.................................................

4) சுற்றுலாவுக்காக ஒரு பிள்ளையிடமிருந்து பெறப்பட்ட பணம் ரூ.200 எனில் தரம் 5 ஆண் பிள்ளைகளிடமிருந்து பெறப்பட்ட மொத்தப் பணம் எவ்வளவு?
.................................................

5) சுற்றுலாவில் பங்குபற்றிய பிள்ளைகளின் எண்ணிக்கை 148. சுற்றுலாவுக்கு ஒழுங்குபடுத்திய பஸ்கள் ஒவ்வொன்றிலும் 50 பிள்ளைகள் மட்டும் ஏற்றிச் செல்லலாம். சுற்றுலாவுக்கு ஒழுங்குபடுத்திய பஸ்களின் எண்ணிக்கை யாது?
.................................................

▸ கீழே தரப்பட்ட அலகுகளின் நியமக் குறியீட்டை எழுதுக.




1) 5 கிலோகிராம்
.................................................

2) 8 மீற்றர் 40 சென்ரி மீற்றர்
.................................................

3) இந்த உபகரணத் தொகுதியின் பெயரென்ன?
.................................................

4) A,B,C என்ற பகுதிகளைப் படத்தில் பெயரிடுக.
.................................................

▸ பின்வரும் சொற்களைச் சிங்கள எழுத்துக்களைப் பயன்படுத்தி சிங்கள மொழியில் எழுதுக.

1) எங்களது :.................
2) பால் :.................
3) கத்தரிக்காய் :.................
4) கண் :.................

▸ நான் எனது அம்மாவுடன் கோயிலுக்கு நடந்து சென்று கொண்டிருந்தேன். நாங்கள் சென்ற வீதியில் வளைவு ஒன்று காணப்பட்டது. அதன் அருகே இரு சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். டமார் என்ற சத்தம் கேட்டது. நான்கு சொற்களுக்குக் குறையாத பொருத்தமான எழுவாய் பயனிலையுடன் ஆறு வாக்கியங்களில் பூர்த்தி செய்க.

1) .................................................
2) .................................................
3) .................................................
4) .................................................
5) .................................................
6) .................................................

**T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp.Trd**
**ஆசிரிய ஆலோசகர் மேல்மாகாணம்**



# மாணவர் மலர்

## வினாத்தாள் 01

மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - 2005

சிலபொருட்களின் விலைகள் கீழே காட்டப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.







01. விலை அதிகமான பொருள் எது?
.................................................

02. விலை குறைந்த பொருள் எது?
.................................................

03. அநேக தடவைகள் விலை குறிக்கப்பட்டபொருள் எது?
.................................................

04. சமவிலையுள்ள பொருட்கள் இரண்டு தருக?
.................................................

05. ஒரு பெட்டியும்ஒரு சோடாவும்வாங்க எவ்வளவு பணம் தேவை?.................

06. மீரா ஒரு புத்தகமும் ஒரு அடிமட்டமும் வாங்கிக் கொண்டு ரூபா 50.00 கொடுத்தாள். அவளுக்குக் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?
.................................................

07. 4புத்தகங்களின்விலைக்கு வாங்கக் கூடிய பெட்டிகள் எத்தனை?
.................................................

08. 45.00 ரூபாவுக்குஎத்தனை அடிமட்டம் வாங்கலாம்?
.................................................

09. படத்தில் காட்டப்பட்டுள்ள எல்லாப் பொருட்களிலும் ஒவ்வொன்று வாங்கிய அல்வாக் கடைக்காரனிடம் ரூபா 100 ஐக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?
.................................................


10. ஒருடசின் பென்சில் வாங்க குகப்பிரசாந்தன் எவ்வளவு கொடுத்தான்?
.................................................

11. படத்தில் காணப்படும் விலங்குகளும் அதிகபாரம் தூக்கக் கூடியதன் கீழ்க்கோடிடுக




1) 2) 3) 4)

12. பின்வரும் உருக்களில் வித்தியாசமான உருவின் கீழ்க்கோடிடுக.



13.




14.




☆ படங்களை அவதானித்துச் சரியான விடையின் இலக்கத்தை விடைக்கோட்டில் எழுதுக.

15.



1. பிள்ளை கை கழுவுகிறது
2. பிள்ளை பாத்திரத்தில் துப்புகிறது
3. பிள்ளை நீர் அருந்துகிறது

16.



1. மாணவன் பத்திரிகை பார்க்கிறான்
2. மாணவன் வினாத்தாள் வாசிக்கிறான்
3. மாணவன் கடிதம் வாசிக்கிறான்.


17.




1. பிள்ளை இரவு உணவை உண்ணுகிறது
2. பிள்ளை பகல் உணவை உண்ணுகிறது
3. பிள்ளை காலை உணவை உண்ணுகிறது

☆ பின்வரும் உருக்களில் முதல் நான்கு உருவுக்கும் ஏற்ப ஐந்தாவதாக வரவேண்டிய உருவைத்தெரிவு செய்து அதன் இலக்கத்தை உரிய இடத்தில் அடைப்பினுள் எழுதுக.


18.




19




20.



21.



22.



சரியான விடையினைத்தெரிவு செய்துவெற்றுக்கோட்டில் எழுதுக

23. ஆடுகத்தும் என்பது போல சேவல் ....
1. பேசும் 2. சொல்லும் 3. கூவும் 4. கீச்சிடும்

24. நாயின் ஆண் கடுவன் என்பது போல் யானையின் ஆண்...
1. பிடி 2. அலவன் 3. களிறு 4. குண்டு


25. மாட்டின் மலம் சாணம் என்பது போல கழுதையின் மலம்...
1. விட்டை 2. இலத்தி 3. எச்சம் 4. மலம்

26. நூலாசிரியர் தமது நூல் பற்றி எழுதும் உரை...
1. அணிந்துரை 2. முன்னுரை 3. சுயசரிதை 4. பரிந்துரை


27. கணவன் என்பதற்கு எதிர்பாற் சொல்...
1. கணவி 2. கணவாட்டி 3. கணவதி 4. மனைவி

☆ பின்வரும் உருக்களில் முதல் மூன்றுக்கும் பொருந்தக் கூடிய உருவைப் பின்னுள்ள நான்கு உருக்களில் இருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.


28.




29.




30.




31




32



33



34



ஒரு வியாபாரி தமது கடையில் உள்ள பொருட்களின் விலைகளை ஆங்கில எழுத்துக்களின் மூலம் குறிப்பிட்டிருந்தார்.
சட்டை ஒன்பது ரூபா 524.70 = ABG.IE
சைக்கிள் ஒன்று ரூபா 6138.90 = JFDC .HE

35. சாரி ஒன்று ரூபா 2536.50 = BADIJ.AE =............

36. மின்விசிறி ஒன்றின் விலை - ரூபா DEJE.AE=..........

A,B,C,D என்னும் நான்கு போட்டியாளர்கள் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்கு பற்றினார்கள்.
D போட்டியாளர் B போட்டியாளரை விட மூன்று செக்கனுக்குமுன்பு போட்டியை முடித்துக்கொண்டார்.
Aபோட்டியாளர் C போட்டியாளரை விட நான்கு செக்கனுக்குப்பின்பு போட்டியை முடித்துக் கொண்டார்.
Aபோட்டியாளர் D போட்டியாளரைவிட இரண்டுசெக்கனுக்கு பின்பு போட்டியை முடித்துக் கொண்டார்.
அதன்படி

37. இந்தப்போட்டியில் வெற்றி பெற்றவர் யார்? ...........................

38. போட்டியில் கடைசியாக வந்தவர் யார்?...........................

39. போட்டியை முடித்துக்கொள்ள D எடுத்த நேரம் 12 செக்கன் எனின் போட்டியை முடித்துக் கொள்ள A எடுத்த நேரம் எது?...........................

கீழேயுள்ள பாடலை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாவுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

*கரிய குயில் பாடுமே*
*கள்ளம்இன்றிப் பாடுமே*
*சிறிய மனிதன் புத்தியைச்*
*சிந்தை நொந்து பாடுமே*

இந்தப்பாடல்பகுதியில் குறிப்பிட்டிருக்கும் சிறிய மனிதன் புத்தி என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

1. மனிதன் சிறியவன் பிராணிகள் பெரியன
2. பழக்கத்தால் மனிதன் பிராணிகளைவிடப் பெரியவன்.
3. பிராணிகள் மனிதனைவிட நல்ல பண்புடையன
4. மனிதன் பிராணிகளை விட நல்ல பண்புடையவன்.



# வினாத்தாள் 2

▸ கீழே தரப்பட்டுள்ள அழைப்பிதழை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

வருடாந்தப் பரிசளிப்பு விழா

| | |
|---|---|
| இடம | :- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பிரதான மண்டபம் |
| காலம் | :- 2005-07-25 சனிக்கிழமை பிற்பகல் 5 மணி |
| தலைமை | :- திரு. ச.சிறிகுமரன் (கல்லூரி முதல்வர்) |
| பிரதம அதிதி | :- டாக்டர் தாராடிமெல் அவர்கள் (செயலாளர், கல்வி அமைச்சு) |

வருகை தந்து விழாவைச் சிறப்பிக்குமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இந்துக் கல்லூரி
யாழ்ப்பாணம்.
2005-07-05

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

1) இது என்ன விழாவிற்கான அழைப்பிதழாகும்?
...........................
2) இந்த விழா எந்தக் கல்லூரியில் நடைபெறவுள்ளது?
...........................
3) விழாவிற்குத் தலைமை வகிப்பவரின் பெயரென்ன?
...........................
4) விழாவின் பிரதம அதிதி வகிக்கும் பதவி யாது?
...........................
5) ம.ப.பா என்ற சுருக்கக் குறியீட்டை விரித்து எழுதுக.
...........................
6) இந்த அழைப்பிதழ் யாரால் அனுப்பப்பட்டது?
...........................
7) இந்த விழா எப்போது நடைபெற்றது?
...........................
8) இந்த விழாவைக் கொண்டாடும் பாடசாலை எந்த மாகாணத்தில் உள்ளது?
...........................
9) விழா ஆரம்பமாகும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.
...........................
10) விழாவிற்கு 34 ஆசிரியர்கள் வந்திருந்தார்கள் 34ஐ உரோமன் இலக்கத்தில் எழுதுக.
...........................

▸ பின்வரும் சொற்களை ஆங்கிலத்தில் (ஆங்கில எழுத்துக்களில்) எழுதுக.

1) வியாழக்கிழமை :...........................
2) நூல்கள் :...........................
3) பிற்பகல் :...........................
4) அதிபர் :...........................
5) அழைக்கிறோம் என்பதை எதிர்காலத்தில் தருக.
...........................

▸ கீழே தரப்பட்டுள்ள ஒவ்வோர் ஆங்கிலச் சொல்லுக்கும் பொருத்தமான தமிழ்ச் சொல்லை மேலுள்ள பந்தியிலிருந்து தெரிந்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1) Class Room :...........................
2) Prize Giving :...........................
3) A.M. :...........................
4) Laboratry :...........................

▸ கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1) சூரியன் ஒரு செயற்கை ஒளி முதலாகும் (.......)
2) தூய நீருக்கு நிறம், மணம், சுவை என்பன இல்லை (.......)
3) படித்த மாணவனை ஆசிரியர் நன்கு பாராட்டினார் என்பதில் நன்கு என்பது பெயரெச்சம் (.......)
4) நான்கு முகங்களைக் கொண்ட உரு சதுரமுகி ஆகும் (.......)
5) தேசிய இலச்சினையில் சூரியர், சந்திரர் உள்ளனர் (.......)
6) மனித சக்தியை மட்டும் கொண்டு இயக்கப்படும் உபகரணம் தள்ளுவண்டி ஆகும் (.......)

▸ சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) தெங்கு நுளம்பு முட்டை இடக்கூடிய இடம் எது?
1) அசுத்த நீர் 2) சுத்தமான நீர்
3) சிரட்டையில் தேங்கி நிற்கும் நீர்

2) அடிப்படை நிறங்களில் ஒன்று அல்லாதது
1) நீலம் 2) பச்சை 3) ஊதா


3) மைதான நிகழ்ச்சிகளில் ஒன்று
1) 100 மீற்றர் ஓட்டம் 2) அஞ்சல் ஓட்டம்
3) நீளம் பாய்தல்

4) உயிர்ச்சத்து E குறைவால் உண்டாகும் நோய்
1) என்புருக்கிநோய் 2) நரம்புத்தளர்ச்சி 3) மாலைக்கண்

5) வெப்பத்தை விரைவாகக் கடத்தமாட்டாதது எது?
1) கண்ணாடிக்குவளை 2) அலுமினியப்பேணி
3) செப்புக்கோப்பை

6) அலங்காரத் தையல் முறையின் கீழ்வரும் ஒரு தையல் முறை
1) சோம் தையல் 2) சிறுநூலோடி 3) நரம்புத்தையல்

▸ கீழேயுள்ள வரைபு ஒரு பாடசாலையில் தரம் 5 மாணவர்களின் ஐந்து நாட்களின் வரவு, சலாகை வரைபில் காட்டப்பட்டுள்ளது. அதன்படி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.




1) மிகக் கூடிய மாணவர்கள் சமுகமளித்த நாள் எது?
...........................
2) மிகக் குறைந்த மாணவர்கள் சமுகமளித்த நாள் எது?
...........................
3) சமமான மாணவர்கள் சமுகமளித்த நாட்கள் எவை?
...........................

# சிறப்பாக நடைபெற்று முடிந்த திருமறைக்கலாமன்ற ஆண்டுவிழா

சுதுமலை—

திருமறைக் கலாமன்றத்தின் 40 ஆவது ஆண்டைச் சிறப்பிக்கும் இரண்டாவது கலைச் சங்கம நிகழ்வு - கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு பாரம்பரிய கலை வடிவங்களின் ஊர்வலத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றது.

நாதஸ்வர இசையுடன், பொய்க்கால் குதிரையாட்டம், கோலாட்டம், காவடிகள் சூழ - விருந்தினர்களை மன்றத்துக் கலைஞர்கள் அழைத்துச் சென்றனர். அரங்க நிகழ்வுகள் மன்ற திறந்த வெளியரங்கில், மன்றப் பிரதி இயக்குநர் ஜோ.ஜோன்சன் ராஜ்குமார் தலைமையில் ஆரம்பமாகியது.

புத்தாக்க கிராமிய நடனங்களுடன், விருந்தினர்களின் உரைகள் இடம்பெற்றன. மாநகர சபை ஆணையாளர் கலாநிதி குணராசா, யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலைய இணைப்பாளர் கலாநிதி அ.சண்முகதாஸ், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதிஎஸ்.சிவலிங்கராசா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

திருமறைக் கலாமன்ற மூத்த கலைஞர்களில் 22 பேர் - பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து நினைவுச் சின்னமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இவர்களில் எவ்.யூட்ஸ் கொலின், ஏ.ஆர்.விஜயகுமார் ஆகிய இருவருக்கும் 'கலைஞானச்செல்வன்' என்ற சிறப்பு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

கௌரவிக்கப்பட்ட கலைஞர்களால் திருமறைக் கலாமன்ற இயக்குனர் அருட்கலாநிதி மரியசேவியர் அடிகளார் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டார். சிறப்பு நிகழ்வாக 'கொல் ஈனுங் கொற்றம்' கூத்துருவ நாடகம் இடம்பெற்றது.

இரண்டாவது கலைச் சங்கம நிகழ்வுகளில், முதல்நாள் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மன்றப் பதிவுகளின் கண்காட்சிகள் முற்றத்தில் ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று நாட்கள் இடம்பெற்றன. புகைப்பட ஓவியக் கண்காட்சிகளுடன் மன்ற வெளியீடுகளும் இடம்பெற்றதோடு - சிற்பக் கலைஞர் ஏ.வி.ஆனந்தனின் சிற்பங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டன.

இரண்டாம் நாள் நிகழ்வில் பாரம்பரிய கலைவடிவங்களைத் தாங்கிய ஊர்வலம் இடம்பெற்றது. அரங்க நிகழ்வுகளில் 20 திருமறைக் கலாமன்ற அங்கத்தவர்களின் கிராமிய புத்தாக்க நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன.

40 ஆவது ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில் 'கலைச்சுவடு' என்ற சஞ்சிகை வெளியீடும் இடம்பெற்றது. சஞ்சிகையை கலாநிதி அ.சண்முகதாஸ் வெளியிட - யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சங்கத் தலைவர் சொலமன் சூ. சிறில் பெற்றுக்கொண்டார். (91)

# வடமராட்சி கோட்டத்தில் ஆங்கிலதினப் போட்டி!

ஆழியவளை—

வடமராட்சி கல்வி வலயத்துக்கான கோட்ட மட்டத்திலான ஆங்கிலதினப் போட்டிகள் - எதிர்வரும் 6, 8, 9, 10 ஆம் திகதிகளிலும் - வலயமட்டப் போட்டிகள் 27 ஆம் திகதியும் நடைபெறவுள்ளதாக ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதன்படி பருத்தித்துறைக் கோட்டத்துக்கான போட்டிகள் - எதிர்வரும் 6, 9 ஆம் திகதிகளில் வட.இந்து மகளிர் கல்லூரியிலும் -

கரவெட்டி கோட்டத்துக்கான போட்டிகள் - 6, 8 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும்,

மருதங்கேணி கோட்டத்துக்கான போட்டிகள் - 6, 10 ஆம் திகதிகளில் மருதங்கேணி இ.த.க.பாடசாலையிலும், வலயமட்டப் போட்டிகள் வட.இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன. (122)



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய புதிய நூலகத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன் திறந்துவைப்பதையும், மாணவி ஒருவர், வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வராசாவிடம் ஒரு தொகுதி நூல்களை வழங்குவதையும் படங்களில் காணலாம். (111)

# தமிழரின் கல்விப் பாரம்பரியத்தில் கல்வி மாநாடுகள் நடத்துவது அவசியம்

ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி

யாழ்ப்பாணம்—

எழுபதுக்கு முற்பட்ட காலங்களில் எமது பிரதேசங்களில் கல்வியை, ஏழைப் பெற்றோர்கள் தமது வாயையும், வயிற்றையும் கட்டி வளர்த்தெடுத்தார்கள். மிகவும் கஷ்டப்பட்டு, பிடி அரிசி எடுத்து, கல்விக்கான முதலீட்டை அவர்கள் செய்தார்கள். அவர்களால் அன்று அவ்வாறு செய்யப்பட்ட தியாகங்கள்தான் இன்று எமது சமூகத்தில் பல கல்விமான்களை உருவாக்கியுள்ளது என - கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி தெரிவித்தார்.

அகவிழி நிறுவனமும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையும் இணைந்து அண்மையில் நடத்திய 'கல்வி ஒரு பன்முகப்பார்வை' என்ற மாநாட்டின் தலைமையுரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தனது உரையில் -

தமிழர்களது கல்விப் பாரம்பரியத்தில் இந்த மாதிரியான கல்வி மாநாடுகள் காலத்துக்குக் காலம் நடத்தப்பட்டே வந்துள்ளன. அதன்மூலம் கல்விக்குப் பெருமை சேர்த்த ஒரு பாரம்பரியம் எமக்குண்டு.

தமிழர் தாயகத்தில் இருந்து மட்டுமல்லாது - தமிழகத்தில் இருந்தும் அறிஞர்களை அழைத்து வந்து சேக்கிழார் விழா, தமிழ் விழா, கல்வி விழா எனச் சிறப்புற விழாக்களை நடத்திய பாரம்பரியம் எமக்குண்டு. எமது கல்விப் பாரம்பரியத்தின் சிறப்புக்கு இவையும் காரணமாக அமைந்தன.

அண்மைக் காலமாக இவ்வாறான மாநாடுகளை நடத்துவதற்கு சூழ்நிலைகள் உதவுவதாக இருக்கவில்லை. அதனால் எமக்கு, எமது கல்விப் புலத்துக்கு மிகப் பெரிய இழப்பு. இன்று தமிழர்கள் தமது கல்வியை இழந்து நிற்கின்றனர் எனப்பல ஆய்வாளர்களும் தமது ஆய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டிவருகின்றனர்.

எமது தேசம் கட்டியெழுப்பப்பட்டுவரும் இன்றைய காலகட்டத்தில், கல்வியில் நாம் எழுந்து, நிமிர்ந்து நிற்பது மிகப் பிரதானமானதாக மாறியுள்ளது. இன்றைய அவசர உலகத்தில் - அறிவைத் தேடும் பயணத்தில் இருந்து நாம் வெகு தூரத்துக்கு விலகிவிட்டோம்.

நூல் நிலையங்களைப் பாவிப்பது மிகவும் அருகிவிட்டது. எமது நூல் நிலையத்தில் உள்ள புத்தகங்கள் நிறைந்த கற்போடு இருக்கின்றன என எமது பேராசிரியர்கள் அடிக்கடி கூறுவார்கள். இது உண்மைதான்.

எழுத்தறிவித்தவன் இறைவன் என்பது எமது தமிழர் பாரம்பரியம். அந்தப் பாரம்பரியத்தை எமது மத்தியில் தொடர்ந்தும் பேண, எமது ஆசிரியர் சமூகம் வாழ்வாங்கு வாழ இந்தக் கல்வி மாநாடு பெரிதும் உறுதுணை புரியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சாவகச்சேரி வைத்தியசாலைக்கு நிதி ஒதுக்கீடு

சாவகச்சேரி—

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்திலிருந்து சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு ஆய்வுகூட உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்கு என நாடாளு மன்ற உறுப்பின[illegible] மாவை சேனாதிராஜா 9[illegible] ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார். (29)

# இலவச கணினிப் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரல்!

யாழ்ப்பாணம்—


கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கம் - தமது சங்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வாழும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த படித்த இளைஞர், யுவதிகளுக்கான குறுகியகால இலவச கணினிப் பயிற்சிக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இந்தச் சங்கத்தால் நடத்தப்பட்ட 5 ஆவது கட்ட கணினிப் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் இந்த மாத இறுதியில் வழங்கப்படவுள்ளதாகவும் -

6 ஆவது கட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ள பயிற்சிநெறிக்கே தற்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டிருப்பதாகவும் சங்கத் தலைவர் நா.தனேந்திரன் தெரிவித்தார்.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### அகவை ஒன்று



பெயர் : அ.எஞ்சலினா
முகவரி : ஆனைக்கோட்டை



பெயர் : ர.அபிநயன்
முகவரி : கொற்றாவத்தை

### அகவை ஏழு



பெயர் : சி.நீரஜன்
முகவரி : வதிரி

### வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ---------------
முகவரி : ---------------
பிறந்த ஆண்டு : ---------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

---------------
பெற்றோர் ஒப்பம்

# கற்கோவளம் புனித நகரில் ஐம்பது வீட்டுத்திட்டம்!

ஆழியவளை—

சுனாமியால் பாதிக்கப்பட்ட கற்கோவளம் பகுதி மக்களுக்கு போர்ட் ஹோட்ஸ் நிறுவனம் 50 வீடுகளைக் கட்டிக்கொடுக்க முன்வந்துள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டு விழா - எதிர்வரும் சனிக்கிழமை புனிதநகர் அரச காணிப்பகுதியில் இடம்பெறவுள்ளது.

சுமார் 7 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இந்த வீடுகளுக்கான அடிக்கல்லை யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் நாட்டுவார்

வீட்டுத்திட்டப் பகுதியில் இந்த நிறுவனத்தால் மின்சாரம், போக்குவரத்து, குடிநீர், மலசலகூட வசதி, நூல் நிலையம் போன்றவையும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. (122)

# கரித்தாஸ் - கியூடெக் ஏற்பாட்டில் மனித உரிமைகள் கருத்தரங்கு!

சுதுமலை—

கரித்தாஸ்-கியூடெக், கரித்தாஸ் - வாழ்வோதயம், கரித்தாஸ்- ஏகெக் நிறுவனங்கள் இணைந்து வடக்கு - கிழக்கில் மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளன.

டென்மார்க் மனித உரிமை நிறுவனம், டனிடா இலங்கை மனித உரிமை நிறுவனம் ஆகியவற்றின் ஊடாகவே இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

முதற்கட்டமாக இடம்பெயர்ந்து, நலன்புரி நிலையங்கள், உறவினர், நண்பர்களது வீடுகளில் தங்கியுள்ளவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் - கரித்தாஸ், கியூடெக், மன்னாரில் - கரித்தாஸ், வாழ்வோதயம் மட்டக்களப்பில் - கரித்தாஸ், ஏகெக் நிறுவனங்கள் மனித உரிமைகளின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி, அதனூடாக விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாக -


கரித்தாஸ், கியூடெக் நிறுவன இயக்குனர் அருட்திரு சி.ஜி.ஜெயக்குமார் தெரிவித்தார். (91)



செயல்திறன் அரங்க இயக்கத்தினர் (ATM), சுனாமியால் பாதிக்கப்பட்ட நாகர்கோயில் மகாவித்தியாலய மாணவர்களைக் கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்துச் சென்றபோது எடுக்கப்பட்ட படம். (20)

# நீச்சல் கலையை கட்டாயமாக அனைவரும் பயில வேண்டும்!

## கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை



கிளிநொச்சி—

நீச்சல் கலை என்பது முக்கியமானதும், அவசியமானதும் ஆகும். இந்த நீச்சல் கலையை அனைவரும் பயின்றிருத்தல் அவசியம் என கடற்புலிகளின் தளபதி சூசை தெரிவித்தார்.

காந்தரூபன் அறிவுச் சோலையில் நீச்சல் கலைக்கூடம் திறப்பு விழாவில் கலந்து கெண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

சுனாமி அனர்த்தத்தின் போது வடமராட்சி கிழக்கு தொடக்கம் முல்லைத்தீவு வரையான பகுதிகளில் 4 ஆயிரத்து 500 பேர் வரையில் இறந்திருக்கிறார்கள். இவர்களுக்கு நீச்சல் தெரிந்திருந்தால் கட்டாயமாக 1500 பேருக்குமேல் உயிர் பிழைத்திருக்க முடியும். புதிய தொரு சமுதாயத்தில் புதிய கட்டமைப்பில் முன்னுதாரணமாகக் காந்தரூபன் அறிவுச் சோலை சிறார்கள் திகழவேண்டும்.

காந்தரூபன் அறிவுச்சோலை சிறார்களாகிய நீங்கள் நீச்சலில் ஈடுபட்டால், உங்களை பார்த்து எல்லோரும் கண்டிப்பாக ஈடுபடுவர். தமிழீழத்தில் நீச்சல் ஒரு பிரதான கலை. தேசியத் தலைவரின் கனவுகளில் இதுவும் ஒன்று. எல்லோரும் பயின்றிருக்க வேண்டும். ஆனால் எமது சமூகக் கட்டமைப்புக்கள் இந்தக் கலைக்குத் தடையாகவே இருந்து வந்துள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மங்கள விளக்கை ஜெகன் ஏற்றிவைத்தார். காந்தரூபன் மற்றும் அவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கரும்புலிகள் கொலின்ஸ், வினோத் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கான ஈகச்சுடரை ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி ஏற்றி வைத்தார். திருவுருவப் படங்களுக்கான மலர்மாலையை நீச்சல் ஆசிரியர் பஞ்சரத்தினம் அணிவித்தார்.

இந்த நிகழ்வின் தொடக்கவுரையை காந்தரூபன் அறிவுச் சோலையின் பொறுப்பாளர் புவியரசன் நிகழ்த்தினார். அறிமுகவுரையை நீச்சல் ஆசிரியர் பஞ்சரத்தினம் நிகழ்த்தினார்.

நீச்சல் கலைக்கூடத்தை ஜெகன் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் போராளிகள், காந்தரூபன் அறிவுச்சோலைச் சிறார்கள் கடற்புலிகளின் தளபதி சூசை ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களும், காந்தரூபன் அறிவுச் சோலை சிறுவர்களும் நீச்சல் பயிற்சியில் ஈடுபடுவதற்காகவே இந்த நீச்சல் கலைக்கூடம் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பயிற்சிக்கான ஆசிரியர் அவுஸ்ரேலியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் சிறார்களுக்கு நீச்சலைப் பயிற்றுவிப்பதற்கு விருப்பங்கொண்டு வருகை தந்துள்ளார். இவர் நீச்சல் ஆசிரியர்களை உருவாக்கி அதன் பின் அந்த ஆசிரியர்களே சிறார்களுக்கு நீச்சல் பயிற்சியை வழங்கவுள்ளனர்.

இந்த நீச்சல் கலைக்கூடம் முதன் முதலாக காந்தரூபன் அறிவுச்சோலையில் திறந்து வைக்கப்பட்டது. இது போன்று வேறு இடங்களிலும் திறந்து வைக்கப்படவுள்ளன.

# ஒட்டுசுட்டானில் 27 முன்பள்ளிகளின் சிறார்களுக்கான விளையாட்டுப்போட்டி

ஒட்டுசுட்டான்—

ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த 27 முன்பள்ளிகளுக்கான விளையாட்டு நிகழ்வு கடந்த சனிக்கிழமை கற்சிலைமடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வுக்கழகம், மாங்குளம்அபிவிருத்திநிறுவனமும், பொருண்மிய மதியுரையகமும் இணைந்து நடத்திய இந்த நிகழ்வு முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் சுதாகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை மாங்குளம் அபிவிருத்தி நிறுவனத் தலைவர் சக்திவேல் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை ஒட்டுசுட்டான் அரசியற்துறை பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனக்கொடி, தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடி, மாங்குளம் அபிவிருத்தி நிறுவனக்கொடி, 27 முன்பள்ளிகளுக்கான கொடிகள் என்பன ஏற்றப்பட்டு சத்தியப் பிரமாணம் நிகழ்த்தப்பட்டது.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவன ஒட்டுசுட்டான் பிரதேச இணைப்பாளர் யோகேஸ்வரி நிகழ்த்தினார். ஆசியுரையை முன்பள்ளி கல்வி மேம்பாட்டுக்குழு ஆலோசகர் திருநாவுக்கரசு வழங்கினார். இதைத் தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின .

இந்த நிகழ்வில் கற்சிலைமடு கிராம அலுவலகர் ஆனந்தராசா, மாங்குளம் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் சக்திவேல், அபிவிருத்தி நிறுவனப் பொருளாளர் கருணேஸ்வரன், முன்பள்ளி கல்வி மேம்பாட்டுக் குழு ஆலோசகர் திருநாவுக்கரசு ஆகியோர் கருத்துரைகளை வழங்கியதையடுத்து, போட்டியில் வெற்றியீட்டிய சிறுவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

# முன்பள்ளிகளுக்கான அடிப்படைத் தேவைகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கி வருகிறது

கிளிநொச்சி—

கிளிநொச்சி மாவட்டத்தில் 175முன்பள்ளிகளில் 5 ஆயிரத்து 600 இற்கும் அதிகமான சிறார்கள் முன்பள்ளிக் கல்வியைக் கற்றுவருகின்றனர்.

கரைச்சி பிரதேசத்தில் 3 ஆயிரத்து 127 சிறார்களும், கண்டாவளைப் பிரதேசத்தில் 995 சிறார்களும், பூநகரிப் பிரதேசத்தில் ஆயிரத்து 170 சிறார்களும், பளைப் பிரதேசத்தில் 420 சிறார்களும் என 5ஆயிரத்து 600 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் கல்வி கற்றுவரும் நிலையில், முன்பள்ளிகளுக்கான நிரந்தர கட்டடங்கள் இன்மை, மகிழ்ச்சியாக விளையாட விளையாட்டு மைதானம் இல்லை, சிறுவர் பூங்காக்கள் இன்மை, போதியளவு ஆசிரியர் இன்மை போன்ற பிரச்சினைகள் நிலவிவருகின்றன.

இந்த முன்பள்ளிச் சிறார்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் தற்போது முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதுடன் தற்காலிக விளையாட்டு மைதானங்கள் போன்ற அடிப்படை வசதிகளையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சுயதொழில் முயற்சிக் கடன்

கிளிநொச்சி—

கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தால் 48 பயனாளிகளுக்கு சுயதொழில் முயற்சிக்கடன் வழங்கப்பட்டது.

சர்வதேச நிறுவனங்களின் நிதிப்பங்களிப்பின் கீழ், மீன்பிடி விவசாய நடவடிக்கை, கால்நடை வளர்ப்பு வியாபாரம் போன்றவற்றில் ஈடுபடும் 18 பேருக்கே இந்தச் சுய தொழில் முயற்சிக் கடன் வழங்கப்பட்டது.

# சுகாதார குறைபாடுகளை உடன் நிவர்த்திசெய்யுங்கள்

## தமிழீழ சுகாதாரப் பணிப்பாளர் பணிப்பு

ஆழியவளை—

பளை மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதி உணவகங்கள், தேநீர்ச்சாலைகள் ஆகியவற்றின் சுகாதாரக் குறைபாடுகளை உடனடியாக நிவர்த்திசெய்யுமாறு தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் விக்கிரமன் கடை உரிமையாளர்களுக்கு பணித்தார்.

பளைப் பகுதிக்கு கடந்த வியாழக்கிழமை விஜயம்செய்த பணிப்பாளர் - இந்தப் பிரதேசத்தில் உள்ள உணவகங்கள் தேநீர்ச்சாலைகள் அனைத்துக்கும் சென்று பார்வையிட்டதுடன், ஒவ்வொரு கடையினுள்ளும் உள்ள சுகாதாரக் கேடான இடங்களைப் படம் பிடித்தார்.

மேலும் இவருடன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர், கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரும் சென்றிருந்தனர். (122)

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## ஓகஸ்ட் -3

1492: புது உலகம் காணும் தனது முதலாவது பயணத்தை பாலோஸ் துறைமுகத்திலிருந்து சாண்டா மேரியா என்ற கப்பலில் கொலம்பஸ் ஆரம்பித்தார். இவருடன் வின்சென்ட் யானெஸ் பின்ஸான் தலைமையிலான குழுவினர் நினா என்ற கப்பலிலும், மார்ட்டின் அலோன்சா தலைமையிலான குழுவினர் பிண்டா என்ற கப்பலிலும் பயணத்தைத் தொடர்ந்தனர்.

1554: பொதிகளை அரக்கு முத்திரையிட்டு, பாதுகாப்பை உறுதிப்படுத்தி அனுப்பும் முறை லண்டனில் ஜி.ஹெர்மன் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

1805: முதன் முதலாக கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. ஈடானுக்கும், ஹாரோவுக்கும் இடையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் ஈடான் வெற்றிபெற்றது.

1858: கொழும்பில் ரயில் பாதை அமைக்கும் பணிகள் ஆரம்பமாகின.

1914: ஜேர்மனி பிரான்ஸின் மீது போரை ஆரம்பித்தது.

1918 : கியூபாவில் 19 வயது முதல் 25 வயதுவரையுள்ள அனைவருக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

1921 : விளை பயிர்களுக்கு முதன் முதலாக விமானம் மூலம் கிருமிநாசினி விசிறும் முறை ஆரம்பமாகியது. ஒஹியோவில் ட்ராம் என்ற இடத்தில் ஜான் பி.மார்க்ரெடி என்பவர் வெட்டுக்கிளியால் பயிர்கள் அழிவதைத் தடுக்க விமானம் மூலம் கிருமிநாசினியைத் தெளித்தார்.

1938 : இத்தாலியில் முஸோலினி அரசு யூதர்களுக்கு எதிராக இனவெறிக் கொள்கையை ஆரம்பித்தது. 1919 முதல் இத்தாலியில் குடியேறிய யூதர்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டனர். யூதர்களுக்கும், இத்தாலியர்களுக்கும் இடையே கலப்புத் திருமணம் தடைசெய்யப்பட்டது.

1949 : ஐரோப்பிய நாடுகளிடையே ஒற்றுமை, சமூக, பொருளாதார மேம்பாடு, ஜனநாயகத்தைப் பேணுதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு, பிரான்ஸின் ஸ்ட்ராஸ் பெர்க்கில் ஐரோப்பியக் குழுமம் உருவாக்கப்பட்டது.

1954: செங்குத்தாக மேலே ஏறி, இறங்கும் விமானமான ரோல்ஸ் ரோய்ஸ் டி.எம்.ஆர். விமானத்தின் வெள்ளோட்டம் பிரிட்டனில் நடைபெற்றது.

1960 : மேற்காபிரிக்காவிலுள்ள நைகர் என்ற நாடு பிரான்ஸின் ஆதிக்கத்திலிருந்து விடுதலையடைந்தது.

1978 : பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள பாரிஸ் வந்திருந்த பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதி, அபு நிடாலினால் கொலை செய்யப்பட்டார்.

1979 : கம்போடியாவில் ஏறக்குறைய 22 லட்சம் மக்கள் பட்டினியால் அவதிப்படுவதாகவும், உள்நாட்டு அரசியல் போக்கால் உலக நாடுகளினால் அவர்களுக்கு உதவ முடியாதிருப்பதாகவும், சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினரும், ஐ.நா. அதிகாரிகளும் அறிவித்தனர்.

1994 : யாழ். குடாநாட்டில் பரவலாக மேற்கொள்ளப்பட்ட கடல், தரை, ஆகாயத் தாக்குதல்களால் பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

2000 : இலங்கையில் புதிய அரசியல் சட்ட நகல் அமைச்சர் ஜி.எல். பீரிஸால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்தப் பிரேரணை மீதான விவாதத்தைத் தொடக்கி வைத்து 100 நிமிடங்கள் ஜனாதிபதி சந்திரிகா நாடாளுமன்றில் உரையாற்றினார்.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு

**வைரவரிகள்...**

*கோரியது மறுக்கப்பட்டால்*
*வலுவான மனிதன் தன்னால்*
*முடிந்ததை எல்லாம் எடுத்துக் கொள்வான்*
*லூசூன்.*

## நமது நோக்கு

# உளத்தாக்கத்துக்குள்ளானோரை மீட்டெடுக்கும் மனிதநேயப் பணி!

தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கிலும் கிழக்கிலும் 1958 ஆம ஆண்டில இனக்கலவரம் தொடங்கி இன்றுவரை தொடர்ந்து நடைபெற்றுவரும் தமிழ் மக்களுக்கு எதிரான போர் உட்பட சகல விதமான அரச பயங்கரவாத நடவடிக்கைகள், அரசியல்ரீதியான ஒடுக்குமுறைகள் மற்றும் அடிப்படை மனித உரிமை மறுப்புக்கள் காரணமாக பல்வேறு வகையிலும் மன அழுத்தங்களுக்குள்ளான மக்கள் பெருமளவில் உள்ளனர்.

வயது மற்றும் பால் வேறுபாடின்றி சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் இத்தகைய உளத்தாக்கத்துக்கு உள்ளான நிலையில, வெறும் மனிதர்களாக, தமது சுயத்தன்மையைப் பெருமளவிற்கு இழந்தவர்களாக பயம், பீதி, துயரம், ஏக்கம், விரக்தி எனப் பல்வேறுபட்ட உளவியல் சிக்கல்களுக்குள்ளானவர்களாகி - வெறுமையான எதிர்காலம் ஒன்றை நோக்கிப் பயணிப்பவர்களாக இருப்பது மனதை இறுக்கும் விடயமாகும்.

உண்மையில் இவர்களின் இன்றைய நிலைக்கு மூலகாரணம் சிங்களப் பேரினவாத மேலாதிக்க ஆட்சியின் திட்டமிட்ட தமிழின அழிப்புச் செயற்பாடுகளின் பன்முகப்பட்ட நடவடிக்கைகளே யாகும்.

இனக்கலவரங்களால் பல்வேறுபட்ட பாதிப்புக்களுக்குள்ளாகி, தாங்க முடியாத இழப்புக்களை, அழிவுகளைச் சந்தித்து - உணர்வழிந்து, சுயமிழந்த நிலையில் வாழும் பல குடும்பங்கள், தனிமனிதர்கள் மற்றும் பல்வேறு தாக்கங்களுக்கு உள்ளாகி நிற்போர் - வடக்கிலும் கிழக்கிலும் தொடர்ந்த போரினால் மேலும் அவலங்களைச் சந்தித்து அதிர்ந்து போனவர்களாக அலைவதை இன்றும் நாம் காணக்கூடியதாக உள்ளது.

தரப்படுத்தல் போன்ற கல்விக் கொள்கைகளால் திறமையும் தகைமையும் இருந்தும், தமக்கான அங்கீகாரம் திட்டமிட்ட நோக்குடன் மறுக்கப்பட்டதால், மனமுடைந்த மாணவர்கள் எத்தனையோபேர் விரக்தியில் ஆளுமை அற்றவர்களாக இருப்பதை நாம் பார்த்திருக்கிறோம்.

போரின் கொடூரங்களைப் பயன்படுத்தி அரச பயங்கரவாதம் - இராணுவரீதியில் மனிதஉரிமைகளை முற்றாகப் புறந்தள்ளிவிட்டு, மேற்கொண்ட இருதசாப்தகால யுத்தம், போரின் விதிமுறைகளை நிராகரித்து விட்டு கண்மூடித்தனமாக நடத்தப்பட்டதால் ஏற்பட்ட இழப்புக்களாலும், அழிவுகளாலும் பாதிப்புக்குள்ளான பல்லாயிரக்கணக்கான மக்கள் - இடம் பெயர்ந்தும், புலம் பெயர்ந்தும் தமது வாழ்வின் வேர்களை இழந்தவர்களாகி, திசைமாறி அலையும் வரலாறு தொடர்கதையாகவே உள்ளது.

கடந்த மூன்றாண்டுகாலச் சமாதானம்கூட தமிழ் மக்கள் தங்களின் சொந்த மண்ணில், சொந்த வீட்டில் சுதந்திரமாக வாழும் வாழ்வை மீட்டுக் கொடுக்கவேயில்லை.

காணாமல் போன தமது உறவுகளைத் தேடி இன்னமும் அலைந்து, நம்பிக்கையிழந்துபோய் நிற்கும் மக்களுக்கு ஆறுதல சொல்ல அரசு தயாராக இல்லை.

சந்தேகத்தின் பேரில் கைதாகி, விசாரணைகள் ஏதுமின்றி பல்லாண்டு காலமாக சிறையில் வாடுவோர்க்கு நீதி வழங்க அரசுக்கு மனமில்லை.

அவர்களின் விடுதலைக்காக ஏங்கி பலவருடமாகக் காத்து நொந்து கிடக்கும் மக்களின் மன அழுத்தமும், உளப் பலவீனமும் அதிகரித்த வண்ணமேயுள்ளது. அவர்களின் ஆழ் மனத் துயரங்களை அவர்களே அறிவர்.

மேலே சொன்னவை சொற்பம் - சொல்ல வேண்டியவை ஏராளம்.

வெறுமனே இதைப் பட்டியலிட்டு ஆகப் போவதுதான் என்ன.

சர்வதேச மன்னிப்புச்சபை உட்பட, மனித உரிமைகளுக்காகப் போராடுவதாகக் கூறும் அமைப்புக்கள் எல்லாமே பட்டியல்களை அறிக்கைகளாக்கி வெளியிடுவதைத் தவிர, வேறெதையும் பாதிக்கப்பட்டோரின் உளத்தாக்கத்திலிருந்து அவர்களை மீட்க முடியாதவர்களாகவே உள்ளனர்.

இது அவர்களை நோக்கி குறைகூறும் வார்த்தைகளேயல்ல. சூழ்நிலை யதார்த்தம் இப்படித்தான் உள்ளது.

இந்த நிலையில், ஆழிப்பேரலை இயற்கை சீற்றம் ஏற்படுத்திய வரலாற்றுக்கொடுமையால் உளவளம் பாதிக்கப்பட்டோர் ஆயிரக்கணக்கில் அமைதியிழந்து அல்லற்படுவது மற்றொரு பெரும் துயரமாகும்.


இவர்களுக்கான ஆற்றுப்படுத்தல் நடவடிக்கைகள் எதனையும் அரசு செய்யப்போவது கிடையாது என்பதற்கு பொதுக கட்டமைப்பின் செயலற்ற நிலையே சான்று.

எனவே, நாமே நமது மக்களின் துயர்துடைப்போராக மாறி அவர்களின் உளநலம் பேண, அவர்களின் சுயத்தன்மை மீள, அவர்கள் அவர்களாகவே மாறி அமைதியான இயல்பு வாழ்வுக்கு மீண்டும்வர ஆவனவற்றைச் செய்யவேண்டிய பொறுப்பு எமக்குரியதே. எமது உளவளத்துணையாளர்கள் இந்த மாபெரும் மானிடப் பணியில் தம்மை அர்ப்பணிப்புடன் இணைத்துக்கொள்ளவேண்டிய வரலாற்றுப்பொறுப்பை ஏற்கவேண்டியவர்களாக உள்ளனர் எனலாம்.

இது ஒரு நெடும் பணி. அவசியமான பணி. இது தொடர்பாக தமிழீழ சுகாதாரப் பணிப்பாளர் சில உறுதியான நடவடிக்கைகளை எடுக்கமுனைந்திருப்பது வரவேற்கத்தக்க விடயம். இந்தப் பணியில் உளவள மருத்துவர்கள், தொண்டு நிறுவனங்கள், சமூக சேவையாளர்கள் என அனைவரும் இணைந்து ஆக்கபூர்வமான செயற்பாடுகளை நன்கு திட்டமிட்ட முறையில் மேற்கொள்வது அவசியமாகும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்



செய்தி:- தாங்கள் சொல்வதுபோல்நடந்தால் மட்டுமே ஜனாதிபதி தேர்தலில் ஆதரவு வழங்கப்படும் என ஜே.வி.பியும், ஜனாதிபதியும் கடுமையாக வலியுறுத்தல்

# கருணை உள்ளம் படைத்த மனிதர்களால்தான் ‘சிவபூமி’ மாணவர்கள் வளர்க்கப்படுகின்றனர்

## ஆண்டு விழா நிகழ்வில் ஆறு.திருமுருகன்



யாழ்ப்பாணம் —

எமது சிவபூமி மனவளர்ச்சி குறைந்த பாடசாலையில் 86 மாணவர்கள் கல்வி கற்றுக்கொண்டிருக்கிறார்கள். எமது இந்தப் பாடசாலையின் பராமரிப்புக்கென மாதாந்தம் சுமார் ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபா வுக்கு மேல் செலவு ஏற்படுகிறது. இவையாவும் அன்புள்ளம் கொண்டவர்களது பங்களிப்பாலேயே நிறைவேற்றக்கூடியதாக இருக்கிறது என, சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

சிறுவர் மனவிருத்திப் பாடசாலையான சிவபூமி பாடசாலையின் முதலாம் ஆண்டு நிறைவு விழா - நேற்று முன்தினம் நடைபெற்ற போது, விழாவுக்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரஞான சம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரையோடு ஆரம்பமாகிய நிகழ்வில் - ஆறு திருமுருகன் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

சிவபூமிப்பாடசாலை தனது முதலாவது ஆண்டை நிறைவு செய்து, 2ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கிறது. இது ஒரு கனவு போலத் தெரிகிறது. இவ்வாறானதொரு ஒரு பாடசாலையை அமைக்க வேண்டும் என நான் ஆசைப்பட்ட போது, அது நிறைவேறுமா? எனப் பலரும் என்னிடம் கேட்டனர். சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் ஆற்றுப்படுத்தலின் கீழ் வளர்க்கப்பட்டவன் - வளர்பவன் என்ற வகையில் கடவுளை நினைத்து அவரை வேண்டி, இதற்கான வேலைகளை ஆரம்பித்தேன். கடந்த வருடத்தில் இந்தப் பாடசாலைக்கான அத்திவாரம் இடப்பட்டதைத் தொடர்ந்து, ஆறுமாத காலப் பகுதிக்குள்ளாகவே கட்டட வேலைகளை முடித்து, இதனைத் தொடங்க இறையருள் கை கூடியது.

இன்று இந்தச் சிவபூமிப் பாடசாலையைத் தரிசிக்க வரும் யாழ்ப்பாணச் சமூகத்தினர் - இந்தப்பாடசாலையை எவ்வாறு திறம்பட நடத்துகிறீர்கள்? என ஆச்சரியத்துடன் கேட்கின்றனர். ஒரு சிலர் இந்த மன வளர்ச்சிகுன்றிய பிள்ளைகளைப் பராமரிப்பதால் என்ன பயன் என்றும் கேட்கின்றனர். இது அவர்களது அறியாமையின் வெளிப்பாடாகக் கூட இருக்கலாம்.

சிவபூமியின் பணி தொடங்கப்பட்ட போது, பலரும் இதற்கு உதவிநின்றார்கள். குறிப்பாக வெளிநாட்டு அன்பர்கள் பெரிதும் உதவி வருகிறார்கள். இந்தச் சிவபூமியில் வாழும் பிள்ளைகள் புண்ணியம் செய்தவர்கள். என்ன பொருள் வேண்டும் என்று இவர்கள் ஆசைப்படுகிறார்களோ, அது ஏதோ ஒரு விதத்தில் அவர்களை வந்து சேர்ந்து விடுகிறது. இப்பொழுது இவர்களுக்கென நவீனமாக ஒரு விளையாட்டு மைதானம் வடிவமைக்கப்பட்டு வருகிறது. இன்னும் ஒரு வருடத்துள் இது பூர்த்தியாகி விடும். பாடசாலையின் இடப்பிரச்சினையைச் சமாளிக்க மூன்று மாடிக்கட்டடம் ஒன்றை தற்போது அமைத்து வருகிறோம்.

இவற்றுக்கும் மேலாக சிவபூமி கண்தான சபை ஒன்றையும் உருவாக்கியுள்ளோம். இந்தச் சபைக்கூடாக பலரும் தமது கண்களைத் தானம் செய்ய விரும்பி இணைந்துள்ளார்கள். பலருக்கும் கண்தானம் வழங்கப்பட்டு வருகிறது. இத்தோடு சிவபூமி ஏழை மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கும் உதவி வருகிறது. எமது தேசம் மகிழ்ச்சியாக இருக்க, இந்தத் தேசத்துக்குத் தேவையான பணிகளை நாம் எல்லோரும் முடியுமான அளவுக்கு ஆற்றி வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (31)

# மல்லாகம் நீதிமன்றத்துக்குப் புதிய கட்டடம் அமைக்க நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம் —

மல்லாகம் நீதிமன்றத்துக்குப் புதிய கட்டடம் அமைப்பதற்கு புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சும், நிதி அமைச்சும் இணைந்து சுமார் 5 கோடி ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளன.

ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி - சம்பந்தப்பட்டவர்களிடம் வழங்கப்பட்ட நிலையில், கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப் படுகிறது.

புதிய நீதிமன்றக் கட்டடம் தமிழரின் கலாசாரப் பாரம்பரியங்களைச் சித்தரிப்பதாகவே அமைக்கப்படவிருக்கிறது என, கட்டட அமைப்புடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கட்டடம் கடந்த யுத்த அனர்த்தத்தால் அழிக்கப்பட்ட நீதிமன்றம் இருந்த அதே வளாகத்திலேயே அமைக்கப்படவுள்ளது. அமைக்கப்படும் புதிய கட்டடத்தில் - நீதிவான் நீதிமன்று, மாவட்ட நீதிமன்று ஆகியன இயங்கவுள்ளன.

# இருமொழி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 50 இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சி

யாழ்ப்பாணம் —

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், அரசியல் யாப்பு விவகார மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் அனுசரணையுடன் நடத்தப்படும் இரு. மொழித்திறன் வேலைத் திட்டத்தின் கீழ், தேசிய இளைஞர் சேவைகள்மன்ற யாழ். மாவட்ட அலுவலகம் 50 இளைஞர், யுவதிகளுக்குப் பயிற்சி வழங்கவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 50 இளைஞர், யுவதிகள் பங்குகொள்ளும் இந்தப் பயிற்சி வகுப்புகள் - எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நான்கு மாதங்கள் இடம் பெறவுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட உதவி இயக்குநர் தி.சிவ தெட்சணாமூர்த்தி தெரிவித்தார். பயிற்சி வகுப்புகள் நல்லூர் தெற்கு விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நான்கு மாதப் பயிற்சியின் பின்னர், இவர்கள் இளைஞர் பரிமாற்றல் திட்டத்துக்கு உட்படுத்தப்படுவர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் இந்த இரு மொழித்திறன் அபிவிருத்தி வேலைத்திட்டம் கொழும்பு, கம்பஹா, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய நான்கு மாவட்டங்களில் நடத்தப்படவுள்ளது. இதன் ஆரம்ப வைபவம் நாளை யாழ். செயலகத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாகாணமட்ட தமிழ்த் தினப்போட்டி 6,7 ஆம் திகதிகளில் வவுனியாவில்

யாழ்ப்பாணம் —

வடக்கு - கிழக்கு மாகாண மட்ட தமிழ்தினப்போட்டி எதிர்வரும் 6, 7 ஆம் திகதிகளில் வவுனியா மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

6 ஆம் திகதி நாட்டுக்கூத்து நாடகப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டியில் - பங்கு கொள்ளும் போட்டியாளர்கள் 5ஆம் திகதி வவுனியா செல்ல வேண்டும் என யாழ். மாவட்டப் போட்டியாளர்களுக்கு யாழ். கல்வி வலய தமிழ் இணைப் பாளர் அறிவித்துள்ளார்.

## தரம் 9 மாணவரின் விபரங்கள்கோரல்

யாழ்ப்பாணம் —

தரம் 9இல் கல்வி கற்கும் மாகாண மட்டபொதுப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் விபரங்களை - எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு - வலயக்கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் சகல பாடசாலை அதிபர்களையும் கேட்டுள்ளார்.

குறிப்பாக - அழகியல், சமயம் ஆகிய பாடங்களுக்கான எண்ணிக்கையையும் மாணவர் எண்ணிக்கையையும் சரிபார்க்குமாறு கேட்டுள்ளார்.

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்

# வருடாந்த இரதோற்சவ சிறப்பிதழ் - 2005

## மாவைக் கந்தனின் திருவருள் துணையை பெற்று உய்வீராக!

சிவகோடி யடையமுனர் செம்மறசக் கிரிவனால்
அவகோடி யகற்றியற் றறுகோடியாலயமுந்
தவகோடி வீடணனாற் றரு முக்கோடியுமாக
நவகோடி சிவாலயங்க ணணியதிலங்காநகரம்

முதன் முதலாகச் சிவபூமியாக விளங்கிய இந் நாட்டின் வடபால் "வீணாகானபுரம்" என்றழைக்கப்பட்ட குடா நாடு உத்துங்கம் பொருந்திய செந்தமிழ்ப் புலவர்களைக் கொண்டிருந்தது. ஆரியச் சக்கரவர்த்திகளால் ஆளப்பட்ட இச்சிவபூமியில் - செயதுங்கவரராஜனது கொடைத்திறனைக் கேள்வியுற்ற சோழ நாட்டு கவிவீரராகவன் எனும் குருடன்- இவ்அரசன் பெயரில் ஓர் பிரபந்தமியற்றி யாழ் மூலம் அதனை இசைத்து, அரசனை மகிழ் வித்தமையால் "மணற்திடல்" எனும் இப்பிரதேசத்தை கவிஞனுக்கு அரசன் பரிசாக வழங்கினார். அன்றிலிருந்தே இப்பிரதேசம் யாழ்பாடியின் நினைவாக யாழ்ப்பாணம் ஆயிற்று. சைவமும், தமிழும் செங்கோலோங்கிய இப்பிரதேசத்தினுள் எப்போ பறங்கியரும், ஒல்லாந்தரும் நுழைந்தனரோ அன்றே யாழ்ப் பாணத்திற்கு கேடு ஆரம்பமானது. கூடவே மிலேச்சர்களது சூழ்ச்சிகளும், தொல்லைகளும், இடையூறுகளும் தொற்று நோய் போன்று வளர ஆரம்பித்தன. இது ஆளும் வர்க்கத்தவர்களது துணைகளாலும் பெருகியது. இதனால் வீழ்ச்சி கண்டது செந்தமிழ் அரியணை. சைவமும், சிவத்தமிழும் ஒடுங்கியது. எனினும் சைவச் சான்றோர்களது மௌனாஞ்சலிகளும், பிரார்த்தனைகளும் வீண்போகாது, இப்போ மெல்ல மெல்ல ஆயாதிகளது செயற்பாடுகள் அற்றுப் போக, இழந்து போன சைவ கலாசாரங்களும், செந்தமிழ் புலமைகளும் வீரர் களது மாண்பும் துளிர் பெறுகின்றன.

இதனை வளர்தெடுக்க சகல ஆலயங்களிலும் தமிழோசை முழங்க வேண்டும். நான்மறை ஓசைகள் சூழலில் தங்கவேண்டும். திருவருட் காட்சிகள் பொலிவோடு வளர வேண்டும். சமுத்திர தீர்த்தங்களாடி எம்மிறைவனை நினைந்து பிரார்த்திக்க வேண்டும். இவற்றை சைவமக்கள் அனைவரும் தமது முதற்கருமமாகக் கொண்டு இயங்கின், வீணாகான புரத்தின் சிவத்தமிழின் மாட்சிமையை மிக எளிதில் யாம் காணலாம். மாவைக் கந்தன் ஆலய உற்சவகாலத்தில் தேரேறிவரும் ஷண்முகப் பெருமானிடம் அனைத்து திருப்புகழஞ்சலியால் பெருமானை மகிழ்வித்து, அப்பெருமானது திருவருட் செல்வங்களைக் கை நீட்டிப் பெற்றுய்யுமாறு சிவபக்தர்களை வேண்டியானும் யாபேரையும் ஆசீர்வதிக்கின்றேன்.

உற்சவகால பூசை, ஆராதனைகள், திருவிழா, பக்திரச கீதங்கள், நாதஸ்வராஞ் சலி என்றெல்லாம் பொருந்தினிற்கும் விழாப் பொலிவினைக்கண்டு, ஆனந்தித்து, மாவைக் கந்த சுவாமியாரது திருவருட் துணைகளைப் பெற்றுய்வீர்களாக. பக்தர்கள் ஒவ்வொருவரும் தயவு கூர்ந்து பஞ்சபுராணங்களை ஓதி, திருவருட்திறனுக்கு ஆற்றுப்படுத்துமாறும் அழைக்கின்றேன்.

மஹாராஜாஸ்ரீ
க.து.ஷண்முகநாதக்குருக்கள்



## மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் உற்சவ மகிமை

ஆண்டுதோறும் ஆடி அமாவாசையை நிறைவாகக் கொண்டு நிகழ்ந்துவருவது மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் மகோற்சவம் ஆகும். எழுச்சியான இந்தக் காலத்தில், அங்கு சென்று வழிபட்ட பக்தர்களின் தொகை ஏராளம். ஆடியும், பாடியும், அங்கப் பிரதிஷ்டை செய்தும், ஆடி அழித்தும், காவடி எடுத்தும் தமது நேர்த்திகளை மாவைக் கந்தனிடத்தில் பிரார்த்தித்து நிறைவேற்றியவர்கள் பலர். ஆனால், இன்று போர்ச் சூழல் காரணமாக, அமைதி நிலவும் பிரதேசமாக கோயிற் சூழல் காட்சி தருகிறது. என்றாலும் ஆதீனகர்த்தரின் ஆளுமையினாலும், அன்பர்களின் அயராத பக்தியினாலும் மாவிட்டபுரம் கந்தனுடைய சூழல் இன்று களைகட்டி இருக்கிறது. அபிஷேகமும், பிரார்த்தனையும், சொற்பொழிவும், நேர்த்திகளும், அன்னதானமும் இந்தக் காலத்தில் நடைபெறுவது குறித்து நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். "கந்தா சரணம் முருகா சரணம் சண்முகா சரணம்" என்று உரத்துப் போற்ற வேண்டியவர்கள் முருக பக்தர்கள். நெருக்கடியில் ஞானம் பிறக்கிறது என்று சொல்லுவார்கள் அருளாளர்கள். அந்த வாக்குக்கு ஏற்ப, இராணுவச் சோதனைச்சாவடிகளில் நேரத்தைச் செலவு செய்தாலும், ஓடோடி மாவைக்கந்தனை தரிசிக்கின்ற கூட்டம் வியப்பைத் தருகிறது. மாருதப்புரவீகவல்லியின் வரலாற்றோடு இணைந்தது இந்த ஆலயமாகும். இன்று புனருத்தாரண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆதீன கர்த்தா மகாராஜ ஸ்ரீ து.சண்முகநாதக்குருக்கள் அவர்களின் அருள் முயற்சிக்கு சைவமக்கள் எல்லோரும் ஆதரவு வழங்கவேண்டும் என்று அன்பாக வேண்டிக்கொள்கிறேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி,
ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## வாழ்வு பெற்ற வல்லியின் மாவிட்டபுரம்

ஆடி அமாவாசையைத் தீர்த்தநாளாகக் கொண்டு, 25 தினங்கள் கொண்ட திருவிழாக்கள் ஆதியிலிருந்தே தொடர்ந்து வருகின்றன. இங்கேதான் முதன்முதலில் மூன்று திருவீதிகள் அமையப் பெற்று, மூன்றாம் வீதி தேரோடும் வீதியாக அமைந்து, இன்றும் அவ்வாறே செயற்படுகின்றது. முகோத்திர மகாரதமும் இங்கேதான் முதன் முதலாக உருவகம் செய்து, 1792 ஆம் ஆண்டளவிலிருந்து உபயோகமானது. இன்றும் இத்தேர் தனது சுயசரிதத்தை விளக்கும் முகமாக அவலங்களைத் தாங்கி நின்று 1990 ஆம் ஆண்டிலிருந்து மௌனபூசையில் அமர்ந்திருக்கின்றது.

தேரிலன்று ஷண்முகப்பெருமானது திருக்காட்சிதான் அற்புதமானது. அழகான ஷண்முக மூர்த்தியை சகலகலா பண்டிதரான ஏரம்ப ஐயர் தனது கரங்களாலேயே உருவகம் செய்ததென ஏட்டுச்சுவடிகள் காண்பிக்கின்றன. கந்த ஷஷ்டியில் உபவாச மிருந்து திருக்கார்த்திகையன்று மெழுகில் இவ்வுருவினை வார்த்தெடுத்து, வைகாசி விசாகத்தன்று பஞ்சலோக வார்ப்பினால் இம் மூர்த்தியை உருவகம் செய்து, சிவபூசா துரந்தர்கள் வேதகீதமொலிக்க, மெய்யடியார்கள் திருமுறை ஓத, இளமங்கையர்கள் அஷ்டமங்கலங்களைத் தாங்கியிருக்க, குழலிசைகள் ஒலிக்க, ஸ்கந்த, காயத்திரி ஜெபங்களை அட்டதிக்குகளிலிலுமிருந்து அந்தணர்கள் ஜெபிக்க, இச் சண்முகப் பரஞ்சுடர் பூமியின் மேல் பஞ்சலோகம் மூலம் தோன்றினாரெனவும், இதனை முதன்முதலாக தரிசித்தவர் அப்போது ஈழநாட்டரசனாக அமைந்திருந்த ஜெயவீரசிங்கையாரிய சங்கரவர்த்தியென (1958 –70) தரவுகள் இருந்தன.

ஆனி உத்தரத்தில் கும்பாபிஷேகம் பெற்ற இம் மூர்த்தி, 5 ஆம் திருநாளில் சிவபக்தர்களை இரட்சிக்கும் முகமாக ஆனந்த நடனமும், 24 ஆம் திருநாளன்று தேரேறி திருவீதி வலம் வந்து

எங்கனும் திருவதனங்கள் எங்கனும் விழிகள்
எங்கனும் திருக்கேள்விகள் எங்கனும் கரங்கள்
எங்கனும் திருக்கழல்கள் எங்கனும் வடிவம்
எங்கனும் செறிந்து அருள் செயும்

ஆறுமுகத்திறைக்கே
என்ற கந்தபுராணத்திற்கமைய அமைந்து
தெய்வநிறை சந்நிதிச் செந்நின்று கைநீட்டித்
திருவருட் திறங்க ளுன்னித் தேயுமன மழியுமலர்
செங்கைக்கு மெட்டு நீ

என மாவை முருகனது திருவருட் கொடையைப் பெற்ற புலவர் பண்டிதர் கந்தையா பாடியுள்ளார்.

இன்றும் இச்சண்முகப் பரஞ்சோதியின் அருள்மாட்சிமையை பேணிக்காக்க அந்தணர்கள் காயத்திரி ஜெபம், நாமார்ச்சனைகள் நான்கு வேத கீதங்கள், பண்ணிசைகள், திருப்புகழஞ்சலி என்றெல்லாம் பெருமானிடம் சொரிந்தும் திருப்புகழால் போற்றிக் கண்மணிபோன்று இப்பரஞ் சுடரைப் போணிக்காப்பாற்றுவதும் இச்சிவபூமி பெற்ற தவப்பயனேயாம்.

மகாமேருவினின்றும் சிதறிய சிகரங்களுள் ஒன்றுதான் ஈழநாடென ஆன்றோரின் முடிவு... சிவபூமியென திருமூலரால் அழைக்கப்பட்ட இவ் ஈழவளநாடு சிறந்த வளங்களைத் தன்னகத்தே கொண்டு, இலங்கையென மருவிற்று. கந்தபுராணம், இராமாயணம், மகாபாரதம் யாவும் இலங்கை சிவபக்தர்களான குபேரனாலும், இராணவனாலும், விபூஷணனாலும் ஆழப் பட்டதென தரவுகள் தருகின்றன. சைவமும், தமிழும் திருநடமாடுதற்கிடமாக இலங்கை விளங்கியது. தேவாரப் பாடல்பெற்ற திருகோணமலை, திருக்கேதீஸ்வரம் என்பவையும் திருப்புகழ் பாடல்பெற்ற கதிர்காமம் ஆதிய தொன்மைத் தலங்களும் தன்னகத்தே கொண்டது இலங்கை. இலங்கையின் வடால் நகுரேஸ்வரமும் அதன் கடல் மருங்கில் சிவபிரானாலேயே தோற்றுவிக்கப்பட்ட கண்டகி தீர்த்தமும் முனிவர்கள் வாசம் செய்யும் மலைக்குகைகளும் இன்றும் காணக் கூடியதாக உள்ளது. இங்கெல்லாம் தீராத பிணி கொண்டோர் தீர்த்தமாடி குணமடைந்த வரலாறுகள் ஏராளம். இந்த வகையில் சோழ இளவரசி மாருதப்புரவல்லி பிணிமுகமும், குஷ்டரோகமும் கண்டகி தீர்த்தமாடி நோய்கள் நீங்கப் பெற்றதனால், கந்தனதும் திருவருள் 5000 ஆண்டுகளாக வேற்பெருமான் சிற்றாலயமாகவிருந்த ஆலயத்தை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலாக புனரமைத்து, சிதம்பரத்திலிருந்து தீஷிதர் பெரிய மனத்தாரை அழைத்து இங்கிருந்த இக்கோவிலையும், அதன் உடமைகளையும் அவரிடம் ஒப்படைத்து பூமியும், வானமும் இருக்கும் வரை எக்காலமும் அவரும் அவரது சந்ததியினரும் மஹாராஜஸ்ரீயாக இவ்வாலயத்தை நிர்வகிக்க வேண்டுமென உத்தரவிட்டு, கோயில் கருமங்களுக்கு வேண்டிய பல்துறைசார் வல்லுநர்களையும் அழைப்பித்து, இங்கு குடியேற்றி மகிழ்ந்தார். இன்றும் பரம்பரை பரம்பரை ஆதிக்கம் சகல துறைகளிலும், இக்கோவிலிலும் பேணப்பட்டு வருகிறது.

தேர்த் திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

எரிக்கணேஷ்
566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2486
கிளைகள்: கொக்குவில், சுன்னாகம்.


இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்
இல: 50, 52, 54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2988

ANNA INDUSTRY
அன்னா தொழிலகம்
இணுவில்
தொ.பே: 021 222 3565

தெல்லிப்பளை
பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்

பாடசாலை உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள்,
மற்றும் பாடப்புத்தகங்களை யாழ் நகரில் பெற்றிட
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 5542

# இலங்கை அணி 50 ஓட்டங்களால் மேற்கிந்திய அணியை வீழ்த்தியது!



தம்புள்ள —

இந்தியன் ஒயில் கிண்ணத்துக்கான முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடரின் நேற்றைய ஆட்டத்தில் இலங்கை அணி - மேற்கிந்தியத் தீவுகள் அணியை 50 ஓட்டங்களால் தோற்கடித்தது.

நேற்றைய ஆட்டத்தில் இலங்கை அணி வீரர்கள் ஜெயசூரிய, வாஸ் ஆகியோர் பங்கேற்கவில்லை.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சார்பாக தரங்க, அத்தபத்து ஜோடி தொடக்க வீரர்களாகக் களமிறங்கியது. ஸ்கோர் 11ஆக இருந்தபோது- 6 ஓட்டங்களுடன் தரங்க ஆட்ட மிழந்தார்.

இதையடுத்து- அத்தபத்துவுடன் சங்ககார இணைந்து இருவரும் அபாரமாக ஆடினர். இந்த ஜோடி இணைப்பாட்டமாக 138 ஓட்டங்களை எடுத்தது.

ஸ்கோர் 149ஐ எட்டியபோது - சங்ககார ஆட்டமிழந்தார். இவர் 115 பந்துகளில் 9 பவுண்டரிகளுடன் 79 ஓட்டங்களை எடுத்தார்.


அடுத்து அத்தபத்துவுடன் டில்ஹார இணைந்து கொண்டார். இவர்கள் ஆடிக்கொண்டிருந்த போது - ஸ்கோர் 171ஆக இருந்த நிலையில் டில்ஹார 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து அத்தபத்துவுடன் ஜெயவர்த்தன இணைந்து ஆடிக் கொண்டிருக்க, ஸ்கோர் 191ஆக இருந்தபோது அத்தபத்து 70 ஓட்டங்களுடன் ரன் அவுட்டா னார்.

இதன் பின்னர் ஜெயவர்த்தன 16 ஓட்டங்களுடனும், டில்ஷான் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

50 ஓவர்கள் முடிவில் இலங்கை அணி 6 விக்கெட் இழப்புக்கு 241 ஓட்டங்களை எடுத்தது. ஆர்னோல்ட் 21 ஓட்டங்களுடனும், சந்தன 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் டியோ நரைன் 2, பட்லர், சிமித் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.





இதனையடுத்து 242 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மேற்கிந்திய அணிக்கு ஆரம்பமே நன்றாக அமையவில்லை. அவ்வணி 4 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில், ராம்தாஸ் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். இதன்பின், அடுத்தடுத்து விக்கெட்டுக்கள் விழ- ஒரு கட்டத்தில் 75 ஓட்டங்கள் பெற்ற நிலையில் 6 விக்கெட்டுக்களை இழந்து மேற்கிந்திய அணி தத்தளித்தது.

இதில் மார்ஷல் 6, ஜோசப் 9, சந்தர்போல் 14, பவல் 6, டியோ நரைன் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இதன்பின் சிமித் மற்றும் ராம்டீன் இணைந்து நிதானமாக ஆடி ஓட்டங்களைப் பெற்ற போதும், ராம்டீன் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அடுத்து பெஸ்ற் ஒரு ஓட்டத்துடனும், சிமித் 68, லோசன் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இதனால் 45.1 ஓவர்களிலேயே மேற்கிந்திய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்களை மட்டுமே பெற்றதனால், அவ்வணி 50 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

பந்துவீச்சில் மஃறூப் 3, டில்ஹார, மற்றும் முரளி இருவரும் தலா 2, பெர்ணான்டோ, உபுல் சந்தன மற்றும் டில்ஷான் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்று தம்புள்ளவில் நடைபெறும் பகலிரவு ஆட்டத்தில் இந்திய-இலங்கை அணிகளீ மோதுகின்றன.

# கிளைஸ்டர்ஸ் சம்பியன்!



ஸ்டான்போர்ட் —

ஸ்டான்போர்ட் ரெனிஸ் தொடரில் வீனஸை வீழ்த்தி சம்பியனானார் கிம் கிளைஸ்டர்ஸ்.

முன்னணி வீராங்கனைகள் பங்கேற்ற ஸ்டான்போர்ட் ரெனிஸ் தொடர் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடந்தது.

இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், பெல்ஜியம் வீராங்கனை கிம் கிளைஸ்டர்ஸ் ஆகியோர் மோதினர்.

ஆட்டம் தொடங்கியது முதல் ஆதிக்கம் செலுத்தினார் கிம் கிளைஸ்டர்ஸ்.

எந்தத் தருணத்திலும் வீனஸை ஆதிக்கம் செலுத்த அவர் விடவில்லை. சிறப்பாக ஆடிய கிம் கிளைஸ்டர்ஸ் 7-5, 6-2 என்ற நேர் செட்களில் வீனஸை வீழ்த்தி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

## விளையாட்டு

# ஆர்ப்பாட்டம் செய்ததால் நெஹ்ராவுக்கு கண்டனம்!

தம்புள்ள —

அளவுக்கதிகமான ஆட்டமிழப்பு கேட்டு முறையீடு செய்ததற்காக இந்திய வீரர் ஆஷிஷ் நெஹ்ராவை ஐ.சி.சி. கடுமையாகக் கண்டித்துள்ளது.

முத்தரப்பு கிரிக்கெட் தொடரில் இலங்கைக்கு எதிரான போட்டியில் இந்திய வீரர் ஆஷிஷ் நெஹ்ரா ஆட்டமிழப்பு கேட்டு அடிக்கடி பலத்த சத்தமாய் முறையீடு செய்தார். இதுதவிர, பர்வேஸ் மஃரூப்புக்கு நடுவர் ஆட்டமிழப்பு கொடுப்பதற்கு முன்னதாகவே, ஆட்டம் போட்டு அமர்க்களமும் செய்தார்.

இதெல்லாம் ஐ.சி.சி. நன்னடத்தை விதிகளின் கீழ் குற்றம்.

ஆட்ட நடுவர்கள் சைமன் ராபெல், அசோக டி சில்வா இருவரும் இந்தத் தகவலை ஐ.சி.சி. போட்டி நடுவர் மைக் பிராக்டரின் கவனத்துக்கு கொண்டு சென்றனர். இது சம்பந்தமான விசாரனை நேற்று முன்தினம் நடந்தது. ஆடுகளத்தில் விதிகளை மீறிய ஆஷிஷ் நெஹ்ராவை மிகக் கடுமையாகக் கண்டித்தார் பிராக்டர். இந்த வகைத் தவறுகளுக்கு 50 சதவீதம் அளவுக்கு நெஹ்ராவின் சம்பளத்தில் அபராதம் விதிக்கலாம்.

# 700 விக்கெட்டுக்களை எடுப்பதே முரளிதரனின் அடுத்த இலக்கு!


தம்புள்ள —

டெஸ்ட் போட்டிகளில் 700 விக்கெட்டுக்களை வீழ்த்துவதே தனது இலக்கு எனக் கூறியுள்ளார் முத்தையா முரளிதரன்.

அவர் அளித்த பேட்டியில் - இன்னும் 3 அல்லது 4 ஆண்டுகள் என்னால் விளையாடமுடியும். டெஸ்ட் போட்டிகளில் 700 விக்கெட்டுக்களை வீழ்த்தவேண்டுமென்பதே இலக்கு.

முத்தரப்புத் தொடரை நாங்கள் தொடக்கிய விதம் திருப்திகரமாக இருக்கிறது. இந்தியாவுக்கு எதிரான முதல் போட்டியை வெற்றியுடன் ஆரம்பித்திருக்கிறோம். போட்டியின் தொடக்கத்தில் ஷேவாக் அதிரடியாக பவுண்டரிகள் நொருக்கியதைப் பார்த்ததும், மிகப்பெரிய ஸ்கோர் குவித்துவிடுவார்கள் இந்தியர்கள் என்று நினைத்தேன்.

நல்லவேளை எங்கள் வேகப்பந்து வீச்சாளர்கள் தடுத்துவிட்டனர். ஒரு வகையில் அது எனக்கு நல்லதாகப் போய்விட்டது. காரணம், இந்தியர்கள் சுழற்பந்துகளை சிறப்பாக விளையாடக் கூடியவர்கள். அவர்கள் வலுவான நிலையில் துடுப்பாட்டம் செய்து கொண்டிருக்கும்போது நான் பந்துவீச வந்திருந்தால் நிலைமை கஷ்டமாக இருந்திருக்கும். நல்லவேளை, அப்படியில்லை.



ஆதலால், சுலபமாக அவர்களை ஆதிக்கம் செலுத்த முடிந்தது. இந்தத் தொடரில் சச்சின் டெண்டுல்கர், பிரைன் லாறா இல்லாதது ஒருவகையில் எங்களுக்கு அதிஷ்டம் தான். ஆனால், தனிப்பட்ட முறையில் எனக்கு இது ஏமாற்றமே. காரணம், இருவருமே எனது பந்துவீச்சை மிகச் சிறப்பாக விளையாடக் கூடியவர்கள். அவர்கள் இருந்திருந்தால் போட்டி கடுமையான சவாலாக இருந்திருக்கும்.

தொடரை வெற்றியுடன் தொடக்கியிருக்கிறோம். இந்த ஆதிக்கம் தொடரின் கடைசி வரை நீடிக்குமென உறுதியாக நம்புகிறேனென அவர் மேலும் தெரிவித்தார்.

# 59ஆவது இடத்துக்கு சானியா முன்னேற்றம்!

லண்டன் —

இந்திய ரெனிஸ் வீராங்கனை சானியா மிர்சா தரவரிசையில் 59ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

முதலில் 74ஆவது இடத்தில் இருந்த சானியா 70ஆவது இடத்துக்கு முன்னேறி பின்பு 64ஆவது இடத்துக்கு வந்தார். இப்போது அமெரிக்காவில் சின்சினாட்டி போட்டி, ஸ்டான் போர்ட் போட்டி ஆகியவற்றில் அவர் சிறப்பாக விளையாடியதால், தரவரிசையில் மேலும் முன்னேற்றம் கண்டு 59ஆவது இடத்துக்கு வந்துள்ளார். இதை நேற்றுமுன்தினம் உலக ரெனிஸ் சங்கம் அறிவித்திருக்கிறது.






கனடாவின் மொன்றியலில் நடைபெற்ற உலக நீச்சல் சம்பியன் போட்டியில், ஆண்கள் பிரிவில் ஒட்டுமொத்த சம்பியன் பட்டம் வென்ற அவுஸ்ரேலிய வீரர் கிராண்ட் ஹேக்கெட், மகளிர் பிரிவில் ஒட்டுமொத்த சம்பியன் பட்டம் வென்ற சிம்பாவேயின் கிறிஸ்டி கோவன்ட்ரி.

# அறுபதாவது சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார் ஆந்ரே அகாஷி!

லொஸ் ஏஞ்சல்ஸ் —


ரெனிஸ் வாழ்க்கையில் தனது 60ஆவது சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார் ஆந்ரே அகாஷி. மேர்சிடஸ் பென்ஸ் தொடரில் இவர், கைல்ஸ் மில்லரை வீழ்த்தி கிண்ணத்தை வென்றார்.

முன்னணி வீரர்கள் பங்கேற்கும் மேர்சிடஸ் பென்ஸ் கிண்ணத் தொடர் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடந்தது. ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் மூத்த வீரரான ஆந்ரே அகாஷி, தரவரிசையில் 35 ஆவது இடத்தில் உள்ள லக்சம்பேர்க்கின் கைல்ஸ் மில்லரை எதிர்த்து விளையாடினார்.



காயம் காரணமாக இரண்டுமாத இடைவெளிக்குப் பின்பு களமிறங்கியுள்ள அகாஷி தொடக்கத்திலிருந்தே ஆதிக்கம் செலுத்தினார்.

இவரது அபார ஆட்டத்தினால் எளிதில் தோல்வியை ஒப்புக்கொண்டார் மில்லர். சுமார் 90 நிமிடங்கள் நடந்த இந்தப் போட்டியில் அகாஷி 6-4, 7-5 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார். இவர் கைப்பற்றும் 60ஆவது சம்பியன் பட்டம் இது. தவிர, அகாஷி வெல்லும் 800ஆவது போட்டியும்கூட.



உமக் நகரில் நடந்த குரோஷிய ஓபன் ரெனிஸ் இறுதிப் போட்டியில்- ஆர்ஜென்ரீனாவின் கில்லர்மோ கோரியா 6-2, 4-6, 6-2 என்ற செட்களில் ஸ்பெயின் வீரர் கார்லோஸ் மோயாவை வீழ்த்தினார். கிண்ணத்துடன் கோரியா.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# சேது சமுத்திரத்தின் ஊடாகப் பயணிக்க மசகு எண்ணெய் கப்பல்களுக்குத் தடை

## இலங்கைக்கு உறுதியளித்தது இந்தியா

புதுடெல்கி —

சேதுசமுத்திரத் திட்டத்தைச் செயற்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் குறித்து ஆராய இரு நாடுகளின் கூட்டு கண்காணிப்பு முறையை ஏற்படுத்த வேண்டும் என்று இந்தியாவிடம் இலங்கை அரசு யோசனை தெரிவித்தபோதும்- இது குறித்து இந்தியா ஆர்வம் காட்டவில்லை எனத் தெரிய வருகிறது.

இந்தத் திட்டம் தொடர்பாக இரு நாடுகளின் நிபுணர்கள் மற்றும் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் புதுடெல்கியில் நடத்திய ஆய்வின்போதே, இலங்கை அரசின் தரப்பில் இந்தக் கருத்து வலியுறுத்தப்பட்டது.

சுற்றுச்சூழல், மீன்வளம், கப்பல் போககுவரத்தல் ஏற்படும் ஆபத்துக்கள் இந்தத் திட்டத்துக்காக மேற்கொள்ளப்பட்ட ஹைட்ரோ டைனமிக் மொடலிங் முறை ஆகியவை குறித்து இலங்கை கவலை தெரிவித்தது.

சுற்றுச்சூழலுக்கு பெரிய பாதிப்பு ஏற்படாது என்று இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டாலும், தங்களது ஆய்வின்படி பாதிப்பு ஏற்படும் என்று தெரிய வந்துள்ளதாகவும் - மன்னார், புத்தளம் பகுதிகளில் கடல் வளங்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என்றும் இலங்கை அதிகாரிகள் சுட்டிக்காட்டியதுடன், மக்களின் பிரதான வாழ்வாதாரமான மீன்பிடித் தொழில் பாதிக்கப்படும் என்றும் அச்சம் தெரிவித்தனர்.

அத்துடன், இரு நாடுகளும் தங்களிடமுள்ள ஆய்வு விபரங்களைப் பகிர்ந்துகொண்டால்தான் முழுமையான புரிந்துணர்வு ஏற்படும் என்பதையும் அவர்கள் வலியுறுத்தினர்.

ஆனால், அது குறித்து இந்தியத் தரப்பில் எந்த உறுதிமொழியும் அளிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

கால்வாய் தோண்டப்படும் போது எடுக்கப்படும் கழிவுகளைக் கொட்டினால் அது எந்தளவுக்குப் பரவுகிறது என்பதைக் கண்காணிக்க கூட்டுக் கண்காணிப்பு முறை அவசியம். அந்தக் கண்காணிப்பை எப்படி மேற்கொள்வது என்ற வழிகாட்டு நெறிகளை உருவாக்கவேண்டும் என்றும் இலங்கை நிபுணர்கள் கேட்டுக்கொண்டனர்.

ஆனால், கழிவுகள் இலங்கை கடலோரப் பகுதி வரை வருவதற்கு வாய்ப்பில்லை என்று இந்திய அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மசகு எண்ணெய் ஏற்றிச்செல்லும் கப்பல்கள் விபத்தில் சிக்கி, அவற்றிலிருந்து கசிவு ஏற்படுமானால், அது இலங்கைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும், இலங்கை அதிகாரிகள் சுட்டிக்காட்டியதற்கு - மசகு எண்ணெய் ஏற்றிச்செல்லும் கப்பல்களை சேதுசமுத்திர கால்வாய் வழியாக அனுமதிக்கப்போவதில்லை என்று இந்திய அதிகாரிகள் உறுதியளித்தனர்.

மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையைத் தாண்டிச்சென்று மீன்பிடிப்பதால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்தும் இருதரப்பினரும் கவலை தெரிவித்தனர்.

சேது கால்வாய் உருவாக்கப்பட்டால், அதை ஒரு கட்டுப்பாட்டுக் கோடாக வைத்து இரு நாட்டு மீனவர்களும் அதைத் தாண்டிச்செல்லாமல் தடுக்கமுடியும் என்று இந்திய கடற்படை சார்பில் தெரிவிக்கப்பட்டது.

# வெடிபொருட்கள் வைத்திருந்ததாக நால்வர் களுவாஞ்சிக்குடியில் கைது

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு-களுவாஞ்சிக்குடி பட்டிருப்புப் பாலத்திலுள்ள விசேட அதிரடிப்படை முன்னணி காவல் நிலைய பிரதேசத்தில் நேற்றுக்காலை நான்கு தமிழர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

களுவாஞ்சிக்குடியிலிருந்து வெல்லாவெளி நோக்கிப் பயணம் செய்த வாகனத்தில் ஜெலிக்னைட் குச்சிகள்-10 மற்றும் அமோனியம் - 5.27 கிலோகிராம் என்பன கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கருங்கல் விற்பனையுடன் தொடர்புடைய இவர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட வெல்லாவெளிப் பிரதேசத்திற்கு கல் உடைப்பதற்காக இவற்றைக் கொண்டு சென்றிருக்கலாமென்று தெரிவிக்கப்பாடுகின்றது.

கைதான கேசரி தவராசா (களுதாவளை), கந்தப்பன் கோபாலப்பிள்ளை (வெல்லாவெளி), பாக்கியராசா சர்வானந்தம் (களுதாவளை), கணபதிப்பிள்ளை குணசேகரம் (களுதாவளை) ஆகிய இந்த நால்வரும் நேற்று மாலை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

# இராணுவக் கட்டளை அதிகாரிகள் பலர் இடமாற்றம் செய்யப்பட்டனர்!

கொழும்பு —

இராணுவக்கட்டளை அமைப்பில் சில மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாக இராணுவத் தலைமையகத் தகவல்கள் தெரிவித்தன.

கொழும்பு நடவடிக்கைகள் கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் வஜிர விஜேகுணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவ உபகரணப்பிரிவு நிர்வாக ஜெனரலாக பணியாற்றிய இவர் அதற்கு முன்னர் இருவருடங்களாக வெலிக்கந்த 23 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாக பணியாற்றியிருந்தார்.

அதேவேளை, கொழும்பு நடவடிக்கைகள் கட்டளைத் தளபதியாக இருந்த பிரிகேடியர் பீ.சந்ரவங்ச திருமலை 22 ஆவது டிவிசனின் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கொமாண்டோ ரெஜிமென்ட்டைச் சேர்ந்த இவர் ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக போரிட்ட அனுபவம் மிக்கவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருமலை மாவட்டத்தின் 22 ஆம் ஆம் டிவிசனின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுமித பாலசூர்ய பட்டலந்த - இராணுவ கட்டளை மற்றும் பயிற்சிக் கல்லூரியின் நிறைவேற்று அதிகாரியாகவும், பிரிகேடியர் சரத் பெர்னாண்டோ அனுராதபுரம் 21 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கெமுனு ரெஜிமெண்டைச் சேர்ந்த பிரிகேடியர் பெர்னாண்டோ முன்னர் மன்னார் பிரதேச கட்டளை அதிகாரியாக செயற்பட்டவராவார்.

இதேவேளை, 21 ஆவது கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் நிஸங்க விஜேசிங்க உபகரண நிர்வாக ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## தமிழ்த் தேசிய...

4.20 மணியளவில் ஆயிரக்கணக்கான மக்கள், பேராளர்களின் பங்கேற்புடன் மிகுந்த எழுச்சிபூர்வமாக இந்த மாநாடு ஆரம்பமாகியது.

இந்த நிகழ்வின் தொடக்கத்தில் கரும்புலி கப்டன் சிறைவாசன் உள்ளிட்ட மூன்று மாவிரர்களின் தந்தையாரான நாராயணபிள்ளை தேசியக் கொடியை ஏற்றினார். மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் வேல்முருகு சண்முகம் ஈகச்சுடர் ஏற்றினார்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சர்வமதத் தலைவர்களின் நல்லாசிகளை அடுத்து விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரியநேத்திரன், ஜெயானந்தமூர்த்தி, பி.கனகசபை, தங்கேஸ்வரி ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

இந்த மாநாட்டில் மட்டக்களப்பு மங்கள ராமய விகாராதிபதி வண.தம்பிட்டிய சுமண தேரரும் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

மாநாட்டின் முடிவில் தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடனம் வாசிக்கப்பட்டு மட்டக்களப்பு மாவட்ட மக்களின் அங்கீகாரம் பெறப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

நேற்றைய மாநாட்டை முன்னிட்டு மட்டக்களப்பு நகரம் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப் பட்டிருந்ததுடன் பலத்த பாதுகாப்பும் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

மாநாடு நடைபெற்ற மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மைதானத்தை சுற்றி 300பொலிஸார் வரை கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

மைதானம் மற்றும் அதன் சூழலில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. சைக்கிள்கள் உள்ளிட்ட வாகனங்கள் எதுவும் மைதானத்துக்குள் கொண்டு செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இந்த மாநாட்டில் 2000ற்கும் அதிகமானோர் பங்குபற்றியதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## பேச்சுக்களிலிருந்து...

அவர் தெரிவித்தார்.

நோர்வேயின் சோசலிச இடதுசாரிக் கட்சி அரசாங்கம் பதவியிலிருந்த போது இலங்கை சமாதான முயற்சிகளில் எரிக் சொல்ஹெய்ம் விசேட தூதுவராக நியமிக்கப்பட்டார்.

ஆட்சிமாற்றத்தின் பின்னரும் நோர்வே அரசு இவரை சமாதான முயற்சிகளுக்கான விசேட தூதுவராகவும், வெளிவிவகார அமைச்சு ஆலோசகராகவும் நியமித்திருந்தது.

தனது முன்னாள் கட்சிக்கு ஆதரவு தேடியே இவர் பிரசாரங்களை மேற்கொள்ளவுள்ளார். இது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

நடுநிலைமைப் பணியிலிருந்து நான் விலகிக்கொள்வதால் - எந்த எதிர்மாறான விளைவும் ஏற்படாது. 5 வருடங்களாக சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நான் 6 வாரங்கள் இதிலிருந்து ஒதுங்குவதால் எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை.

தேர்தலுக்குப் பின்னர் இலங்கை சமாதான முயற்சிகளுக்கு திரும்புவதற்குத் தயாராக இருக்கிறேன் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, சொல்ஹெய்ம் - தமது கட்சி ஆட்சியமைத்தால் அமைச்சர் பதவி ஒன்றைப் பெறவிரும்புவதாக நோர்வேயில் வதந்திகள் உலாவுகின்றன. ஆனால் அதை அவர் முற்றாக நிராகரித்துள்ளார்.

## மின்சாரசபை ஊழியர்கள் இன்று ஆர்ப்பாட்டம்!

கொழும்பு —

மின்சார சபை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமையைக் கண்டித்தும், மின்சாரசபை மறுசீரமைப்பைக் கண்டித்தும் இன்று மின்சாரசபை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளனர்.

இன்று நண்பகல் மின்சாரசபை தலைமையகத்தின் முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளதாக மின்சாரசபை ஊழியர் சங்கம் மின்சக்தி அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## படையினரின்...

ஊர்காவற் படைவீரர் வேட்டைக்கு சென்றதாகவும் -

ஆள்நடமாட்டத்தைக் கண்ட இராணுவத்தினர் அந்தப் பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்த போதே ஊர்காவல் படை வீரர் காயமடைந்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

## இரத்தத்தையும்...

சிங்கள மக்களுக்கு ஒன்றைச் சொல்லிவைக்க விரும்புகிறோம். நாங்கள் சிங்கள மக்களுக்கோ, சிங்கள மக்கள் எமக்கோ எதிரிகளல்ல நண்பர்கள் தான்.

1987 ஆம் ஆண்டு இந்தியப் படைகள் இங்கிருந்தபோது - ஒட்டுமொத்த இலங்கைத் தீவுக்கான விடுதலைப் போராட்டத்தை எமது தலைவர் தனியே நடத்தி முடித்தார் என்பதை சிங்கள மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். அந்த வகையில் சிங்கள மக்கள் தலைவருக்குக் கடமைப்பட்டவர்கள்.

1983 இல் கலவரம் நடந்தது. யார் வந்தார்கள்? என்ன கேட்டார்கள்? ஒன்றுமில்லையே.

இப்போ மட்டும் 15 வயது பிள்ளை பயிற்சிக்கு வந்ததா? என்று கேட்கிறார்கள். இந்தப் பிள்ளை ஏன் வந்தது என்று யாராவது கேட்கிறார்களா?

1983 இல் 15 நாட்களுடைய குழந்தையை தாரில் போட்டு எரித்தார்களே இதை யார் செய்ததென்று யாரும் கேட்டார்களா?

தமிழர்களைத் தீண்ட முடியாதபடி ஒரு சக்தி இருக்கிறது. நாங்கள் பலமாக இருக்கும் வரைதான் இந்த உலகம் எமக்கு மதிப்பளிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மொழிவிருத்தி ஆய்வுகூட புதிய கட்டடத்திறப்பு விழா!

கிளிநொச்சியில் மொழி விருத்தி ஆய்வுகூடத்திற்கான புதிய கட்டடம் திறந்துவைக்கப்படவுள்ளது.

எதிர் வரும் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் கிளிநொசசி தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தில் இந்தக் கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளதாக தமிழீழ பொருண்மிய மதியுரையகத்தினர் அறிவித்தனர்.

அத்துடன், தொழில் நுட்பக் கல்லூரியில் கணினி பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படவுள்ளதுடன், கல்வி கற்ற மாணவர்களால் இரு நாட்கள் தொழில்நுட்பம் சார்ந்த கண்காட்சியும் நடத்தப்படவுள்ளது.

# ஆறு அமைப்பாளர்களை சுதந்திரக் கட்சி நீக்கியது

கொழும்பு —

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் ஆறு பேர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

கொழும்பு கிழக்கின் பிரதான அமைப்பாளர் ரத்ன கமகே, கொழும்பு மேற்கின் ஹட்சன் சமரசிங்க, மகரகம அமைப்பாளர் அமல் சேனாதிலங்கார, வத்தளையின் நீல் ரூபசிங்க, பலப்பிட்டிய அமைப்பாளர் அஜந்த சொய்ஸா மற்றும் வென்னப்புவ அமைப்பாளர் இவோன் பெர்னாண்டோ ஆகியோரே அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டவர்களாவர்.

தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து இவர்களை நீக்கியிருப்பதாக இந்த ஆறு பேருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதான அமைப்பாளரும் மகாவலி அபிவிருத்தி அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பலவீனமான நிலையில் இருக்கும் ஏனைய தொகுதிகளின் அமைப்பாளர்களும் விரைவில் பதவி நீக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாக புதியவர்கள் நியமிக்கப்படுவதுடன், தற்போது வெற்றிடமாகவுள்ள தொகுதிகளுக்கும் புதிய அமைப்பாளர்கள் நியமிக்கப்படுவர் என்றும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

# பொலிஸ் விளையாட்டு வீரர் கனடாவில் கம்பி நீட்டினார்!

கனடாவில் கியூபெக் மாகாணத்தில் உலகப் பொலிஸ் நெருப்பு விளையாட்டு விழாவில் பங்குபற்றச் சென்ற இலங்கைப் பொலிஸைச் சேர்ந்த மோட்டார் சைக்கிள் விளையாட்டு குழுவின்தலைவர் வர்ணசாந்த அங்கு தலைமறைவாகிவிட்டார்.

கனடாவில் நடைபெற்ற உலகப் பொலிஸ் நெருப்பு விளையாட்டு விழாவில் பங்குபற்றிய இலங்கைக் குழுவின் அதிகாரியான பிரதிப்பொலிஸ்மா அதிபர் பத்திரன இது குறித்துத் தெரிவிக்கையில்

இந்த வீரருக்கு எதிராக எடுக்க வேண்டிய கடுமையான நடவடிக்கை குறித்து அனைத்தும் செய்யப்பட்டுள்ளன. இது போன்ற செயல்களால் எதிர்காலத்தில் இலங்கையின் விளையாட்டு வீரர்களுக்கு வெளிநாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பில்லாமல் போய்விடும்.

இந்த வீரரை கைது செய்வதற்குத் தேவையான அதியுயர் நடவடிக்கைகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட பிரிவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(தே)

## வெள்ளியன்று....

வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் போர்நிறுத்த உடன்பாடு, சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலவரம் உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

# மரண அறிவித்தல்

## சரவணமுத்து வள்ளியம்மை

பன்னாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து வள்ளியம்மை அவர்கள் நேற்று (02.08.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2005) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கேணிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பன்னாலை
தெல்லிப்பளை.

தகவல்:
மகள், மருமகன்

இப்பத்திரிகை இல.267 ,நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.08.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.